உலகை வியக்க வைக்கும் கின்னஸ் சாதனைகள்

பாபநாசம் குறள் பித்தன்

உலகை வியக்க வைக்கும் கின்னஸ் சாதனைகள்

பாபநாசம் குறள் பித்தன்

அம்சா பதிப்பகம்
9A, மேக்மில்லன் காலனி,
நங்கைநல்லூர், சென்னை-61.
☎: 224 5253

நூலின் பெயர்	*உலகை வியக்க வைக்கும் கின்னஸ் சாதனைகள்*
நூலின் ஆசிரியர்:	பாபநாசம் குறள்பித்தன்
மொழி	தமிழ்
பதிப்பு	முதல் பதிப்பு
பதிப்பகம்	**அம்சா பதிப்பகம்** 9A,மேக்மில்லன் காலனி நங்கைநல்லூர், சென்னை-61
வெளியீட்டு ஆண்டு:	டிசம்பர் 1998
பக்கம்	144
நூலின் அளவு	1X 8 கிரவுன்
எழுத்து	12 புள்ளி
கணிணி அச்சு :	ப்ரியாடெக் கம்ப்யூட்டர்ஸ் அசோக்நகர், சென்னை-83.
விலை	ரூ. 36.00

Printed at :

AMAR OFFSET PRINTERS (P) LTD,
2, Ponnappa Chetty Lane, Triplicane,
Chennai-600 005. Ph : 8545433.

அணிந்துரை

நல்லாமூர். கோ. பெரியண்ணன்
செயலாளர்
திருக்குறள் பேரவை நங்கைநல்லூர்

உலகத்தில் சாதனைப் படைத்தவர்களின் பட்டியலில் நீங்கள் இடம் பெற வேண்டுமானால் இதுவரை யாரும் செய்யாத சாதனையைச் செய்ய வேண்டும். அச்சாதனையைச் செய்ய தன்னம்பிக்கை வேண்டும். உலகில் சாதனைப் படைத்த சிறந்த சாதனை யாளர்களைப் பட்டியலிட்டு அழகுற எழுதிய இந்நூலாசிரியர் திரு பாபநாசம் குறள்பித்தன் சிறந்த எழுத்தாளர். சிந்தனையாளர்.

உலகை வியக்க வைக்கும் கின்னஸ் சாதனைகளைப் படித்ததும், நாமும் ஏன் ஏதாவது செய்யக்கூடாது என்று எண்ணம் எழும்படியாக எழுதியுள்ளார்.

அதிக திரைப்படங்களில் நடித்த மனோரமா, 67 மணிநேரம் 5 நிமிடம் கைத்தட்டி சாதனைப் படைத்த

திருச்சி செயராம். ஒரே இடத்தில் 50 மணிநேரம் குதித்து சாதனை படைத்த திருச்சி மரியதாஸ், 5 மணி நேரம் கை, கால்களை ஆட்டாமல் மல்லாந்து படுத்து மிதந்த சண்முகம் ஆகியோர் கின்னஸ் சாதனை படைத்தவர்கள் என்று ஆசிரியர் கூறிய திறம் போற்றற்குரியதாகும்.

சதீஸ்நாராயணன் இளம்பிள்ளை வாத நோயுள்ளவர். இவர் நடனமாடி கின்னஸ் சாதனை படைத்ததையும்,

நான்கு வயது சிறுமி டூரோத்தி புத்தகம் எழுதியதையும்,

9 நிமிடத்தில் 62 வாழைப்பழம் சாப்பிட்டதையும்,

ஒரே நேரத்தில் 750 இட்லி, 3 வாழைப்பழம் சாப்பிட்டதையும்

ஒரே அரிசியில் 4160 எழுத்துகள் செதுக்கியதையும்,

4.30 மீட்டர் நகம் வளர்த்து சாதனை புரிந்ததையும்,

2008 ஆங்கில எழுத்துக்களால் நீண்ட பெயர் வைத்து சாதனை புரிந்ததையும்,

மிக அருமையாக விளக்கியுள்ளார். தமிழில் வெளிவரும், கின்னஸ் சாதனை புத்தகத்தை முதலில் படிக்க ஆரம்பித்ததும் முழுதும் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்துக்கின்றது.

இந்நூலை எழுதிய ஆசிரியரின் தொண்டு வளர்க! மேலும் பல நூல்களை படைத்து, சாதனை படைத்தவர்கள் பட்டியலில் இடம் பெறுவார் என நம்புகிறேன்.

இவண்

சாரணத்தில் என்றும்

கோ. பெரியண்ணன்

நங்கைநல்லூர்.

நம்பிக்கை

எந்த வலையும் விரிக்கப்பட்டு நாம் அதில் மாட்டிக் கொள்ளப்பேவது இல்லை-

எந்தப் பள்ளமும் தோண்டப்பட்டு, நாம் அதில் வீழ்ந்துவிடப்போவது இல்லை- என்ற எண்ணத்தில்தான் பறவைகளும், விலங்குகளும் கூட, காட்டிலே வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. அதுவும் மகிழ்ச்சியாக. ஆனால் நாட்டிலே வாழும் மனிதர்களிடம் மட்டும் அந்த தன்னம்பிக்கை இன்னும் அதிகமாக- மிக மிக அதிகமாக வளர வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்த நூலினை நான் எழுத முனைந்தேன். இந்த முனைப்பிற்கு நான் எடுத்துக் கொண்ட காலம் ஒன்பது ஆண்டுகள்.

இந்த நூலில் தன்னம்பிக்கையோடு தங்கள் வாழ்க்கையில் சாதனைபடைத்து- வெற்றி கண்டவர்களின் விலாசங்களை விரித்திருக்கிறேன்.

நம்பிக்கையோடு தொடர்கின்ற எந்தப் பயணமும் -செயலும் வெற்றியைத் தவிர வேறு எதையும் தராது. குதிரில் இருக்கும் நெல்கூட நாம் ஒருநாள் வெளி வருவோம் என்ற நம்பிக்கையில்தான் இருக்கிறது.

நம் காலடியில் கிடக்கின்ற புல் கூட நாம் ஒருநாள் நீண்டு வளர்வோம் என்று எண்ணிக் கொண்டுதானிருக்கிறது. சோதனைகள் நம் உடலில் உள்ள மச்சம் அல்ல- அழுக்கு! கலையும்-கலைக்கலாம்.

இந்த நூல் அந்த வகையில் உங்களுக்கெல்லாம் தண்ணீராகி தன்னம்பிக்கையை வளர்க்கும் என்றால் எமக்கு மகிழ்ச்சியே.

இந்நூலினை எனது நண்பர்களான திரு கராத்தே மாஸ்டர் சீகான் திரு எஸ். கோதண்டம் அவர்களுக்கும், பொறியாளர்.திரு வெங்கிடசாமி அவர்களுக்கும் காணிக்கை ஆக்கி மகிழ்கிறேன்.

இந்த தன்னம்பிக்கை நூலை தங்கள் கைகளில் தவழ விட்டுச் சிறப்பித்த திரு நல்லாமூர் கோ. பெரியண்ணன் அவர்களுக்கும், அம்சா பதிப்பக உரிமையாளர் திரு பெ. மயில்வேலன் அவர்களுக்கும் உடன் பிறவா சகோதரர் கவிஞர் ஆறு.அண்ணல் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி

நட்புடன்

-பித்தன்
990123

பாபநாசம் குறள்பித்தன்
19, லட்சுமிபுரம்,
வடபழனி,
சென்னை 26

போன்: 4843135-PP

உலகை வியக்க வைக்கும் கின்னஸ்- சாதனைகள்

⊙ திருப்பதி கோயிலில் ஒரேநாளில் 72,078 பேருக்கு மொட்டை அடித்து சாதனை செய் திருக்கிறார்கள், அங்குள்ள 800 முடிதிருத்துவோர். இது ஒரு கின்னஸ் சாதனை.

1993-ல் 2ம் தேதி நடந்த பிரம்மோத்சவ விழாவில் ஒருலட்சம் பக்தர்கள் வந்து உள்ளனர். அவர்களில் பெரும் பாலோர் எட்டுமணி நேரம் காத்திருந்து மொட்டை அடித்தனராம்.

⊙ தைவான் நாட்டில் நடந்த எட்டு ஜோடிகளின் திருமணம் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறுகிறது. எதனால்?

இவர்கள் அனைவரும் ஒரு கழிவறையில் திருமணம்செய்து கொண்டார்கள் என்பதற்காகத்தான்.

என்ன முகத்தை அப்படி களித்துக் கொள்கிறீர்கள்? தைபேயில் உள்ள இந்தக் கழிவறை பத்து லட்சம் டாலரில் ஐந்து நட்சத்திர ஓட்டலின் 'காப்பி ஷாப்' பிற்கு இணையாகக் கட்டப்பட்டதாகும். அனைத்தும் மொசைக்.

இதுபோன்ற உயர்ந்த டாய்லட்டுகளைக் கட்டும் போது இந்த ஜோடிகளுக்குக் கட்டட வளாகத்தில் காதல் அரும்பியதாம் எனவே, காதல் வளர்ந்த இடத்தை மறக்காமல் அங்கேயே திருமண நிகழ்ச்சியையும் ஓகோவென்று அமர்க்களமாக நடத்தி விட்டார்களாம்.

⊙ பாலஸ்தீனிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் இந்தியா, பாகிஸ்தான், ஆப்பிரிக்கா பாலைவனத்தில் திரியும் கொடுமையான தேள்கள் என அனைத்தையும் தன் உடலின் மீது ஏற்றிக் கொண்டு விளையாடுகிறார். அப்படியே இவைகள் இவரைக் கொட்டினாலும், இவரைப்பற்றி கவலைப்படத் தேவை இல்லை. ஏனென்றால் இவருக்கு இதனால் ஒன்றும் ஆகாது.

இந்தச் சாதனையை இவர் கின்னஸ் சாதனை புத்தகத்திற்கு நிரூபித்துக் காட்டி இடம் பெற்றிருக்கிறார்.

⊙ தமிழக நீச்சல் வீரர் குற்றாலீசுவரனின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

மிக இளம் வயதில்-ஒரே ஆண்டில் ஆறு கடல்களைக் கடந்து பழைய சாதனையை முறியடித் தமைக்காக இச்சிறப்பு குற்றாலீசுவரனுக்குக் கிடைத்தது.

இவரின் சாதனை இப்படி நீள்கிறது. பாக் ஜலசந்தியை 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் தேதி முதல் முதலாக நீந்திக் கடந்தார். 38 கி.மீ. தூரம் நீந்தினார். இந்த தூரத்தை இவர் 10 மணி நேரத்தில் நீந்தினார்.

ஆகஸ்ட் 15-இல் இங்கிலீஷ் கால்வாய் 37 கி. மீட்டர் தூரம் நீந்தினார். இந்த தூரத்தை இவர் 11மணி 36 நிமிடத்தில் கடந்தார்.

அக்டோபர் 15ஆம் தேதி இத்தாலியிலுள்ள சனோன் தீவிலுள்ள கால்வாயைக் கடந்தார். 29 கி.மீ. தூரம் கொண்ட இப்பகுதியை 8 மணி 53 நிமிடத்தில் கடந்தார்.

டிசம்பர் 7ஆம்தேதி ஆஸ்திரேலியாவிலுள்ள

'ரோட்ன லைப்பட்' கால்வாயைக் கடந்து முந்தைய சாதனையை எட்டினார். 26 கி.மீ. தூரம் கொண்ட இக்கால்வாயை 5 மணி நேரம் 40 நிமிடத்தில் கடந்தார்.

டிசம்பர் 30 ஆம் தேதி சாதனை நீச்சலான ஆறாவது கடலான அந்தமான் பகுதியில் நீந்தினார். 5மணி 39 நிமிடத்தில் 17 கி.மீ. நீந்தி உலக கின்னஸ் சாதனை படைத்தார்.

⊙ 55.63 கிலோ மீட்டர் தூரத்திற்கு நாணயங்களை வரிசையாக வைத்து- இதன் மூலம் 1992-இல் பிரிட்டன் 6,74 கிலோ மீட்டர் தூரத்திற்கு நாணயங்களை வரிசையாக வைத்துக் காட்டிய உலக சாதனை முறியடிக்கப்பட்டது. சாதனை நடந்த இடம் கோலாலம்பூர். இச்சாதனையில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களின் எண்ணிக்கை 23,67,234. இப்படி அமைக்க உதவி புரிந்தவர்களின் எண்ணிக்கை 500 பேர்.

⊙ ஜெஸ்லி ஓவன்ஸ் என்ற அமெரிக்கர் ஓட்டப் போட்டியில் 5 உலக சாதனைகளை 45 நிமிடங்களில் நிகழ்த்தியவர். 1936-இல் பெர்லினில் நடந்த ஒலிம்பிக்கபோட்டியில் உறிட்லரும் கலந்து கொண்டு இந்தச் சாதனையை நேரில் கண்டார்.

⊙ 1995-இல் கிரிக்கெட்டில் செய்யப்பட்ட முக்கிய சாதனை இது. ஒரே இன்னிங்ஸில் பதினாறு சிக்ஸர்கள் அடித்து உலக சாதனையைப் புரிந்தவர். ஆன்ட்ரு சைமன்ட்ஸ். இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்.

⊙ தொடர்ந்து நான்கு மாதங்களில் எட்டுமுறை ஒருவர் உலக சாதனையைச் செய்திருக்கிறார். அவர் பெயர் டோனியோலோ பார்ட்டோவா என்ற போல்வால்ட் வீராங்கனை.குச்சி ஊன்றித்தாவும் இந்த வீராங்கனை 4,22 மீட்டர் உயரம் தாண்டியுள்ளார்.

⊙ பதான் கோட் பகுதியைச் சேர்ந்தவர் 36-வயது ஜிதேந்தர். இவர் சிறுவனாக இருந்தபோது தன் கிராமத்திற்கு அருகே உள்ள பழங்காலக் கோட்டைகள் மற்றும் பாழடைந்த கோயில்களுக்கு மழலைப்பாட்டாளங்களோடு சென்று விளையாடுவது வழக்கம்.

மண்ணைக் கிளறி விளையாடியபோது பழங்கால நாணயங்கள் கிடைத்தன. இவ்வாறு பலநாட்கள் கிடைத்தன. தொடக்கத்தில் இதன் மதிப்பு தெரியா விட்டாலும் ஜிதேந்தர் புத்திசாலித்தனமாக அவற்றை

சேர்த்து வைத்துவர, சற்றே வளர்ந்தபின் அவைகளின் மதிப்பு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் என்பது தெரியவரவே மும்முரமாக நாணய சேகரிப்பில் ஈடுபட்டார்.

தற்போது இவரிடம் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அபூர்வநாணங்கள் இருக்கின்றன. இதன்எண்ணிக்கையும் மதிப்பும் இவரை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறச் செய்துவிட்டது.

கி.மு. ஆறாம் நூற்றாண்டு காலம் முதற்கொண்டு இன்றைய புதிய நாணயம் வரை இவரது சேமிப்பில் அடங்கியுள்ளன. 'சமந்த்தேவ்' நாணயங்கள் மட்டும் 5385 உள்ளன. தவிர பழங்கால அரசர்களின் ராஜமுத்திரை, புராதன அரச குழந்தைகள் விளையாடிய விளையாட்டுப்பொருட்களும் உள்ளன.

இவைகளைச் சேகரிக்க இதுவரை பல இலட்சம் ரூபாய்களை இவர் செலவழித்திருந்தாலும் இவரது சேகரிப்பு பலகோடி மதிப்பு பெறும் என்ற பூரிப்பில் இருக்கிறார் இவர்.

⊙ டோனி பெல்லஸ், அமெரிக்காவில் உள்ள இல்லினாய்ஸ் மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர் எலெக்ட்ரிக்

அக்காடியன் இசைக் கருவியை 53-மணி நேரம் இடைவிடாது வாசித்து உலக சாதனையைச் செய்து இருக்கிறார்.

⊙ பெங்களூரைச் சேர்ந்த சத்ய நாராயணிடம் 2.3 செ.மீ. நீளமுள்ள சின்னஞ்சிறிய தேங்காய் உள்ளது. இதன் எடை 3.85 கிராம். உலகில் மிகச்சிறிய தேங்காய் என்று இதன் பெயரைக் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறச் செய்ய நாராயணன் முயன்று வருகிறார்.

⊙ ஏழு வயதுசிறுவன் அருண்பாலாஜி. இவன் தினமும் சுமார் எட்டு ஆயிரம் மீட்டர் நீந்துகிறான். இவன் ஐந்து வயதாக இருக்கும்போதே சென்னையில் 5,600 மீட்டர் தூரத்தை 3 மணி 5 நிமிட நேரத்தில் கடந்து பரபரப்பை ஏற்படுத்தியவன். இது ஒரு சாதனை. இதனால் சாதனை புத்தகத்தில் இவன் பெயர் இடம் பெற்றுள்ளது.

⊙ முடியலங்கார 'மாடலிங் செய்யும் மார்கரெட் 8 அடி உயரத்திற்கு, கொண்டை போட்டவர். 8சவுரிகள், 22கொண்டைகளுடன் இவர் தலையலங்காரம் செய்ய, ஒரு பெரிய ஏணியைப் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் உள்ள முடி அலங்காரக் கலைஞர்கள் நடத்திய ஒரு கண்காட்சியில் மார்கரெட் செய்து காட்டிய அரிய 'கொண்டைக் காட்சியாம்'. இந்த அலங்காரத்தை செய்தவர் பெயர் ஹென்றி ஹெர்னான்டஸ். 22 நீளக் குழாய்கள், மூன்று லிட்டர் ஹேர் ஸ்ப்ரே, 60 அடி நீளக் கம்பி, 12-பேஸ்ட் டியூப்கள் ஆகியவை இதற்கு பயன்படுத்தப்பட்டனவாம்

⊙ மைசூரைச் சேர்ந்தவர் நாகேந்திரபாபு. வயது 21. இவர்இதுவரை வெளிவராத மிகப்பெரிய வாழ்த்து அட்டையைத் தயாரித்திருக்கிறார். இதன் நீளம் 276 அடி. பத்தே எழுத்துக்கள் கொண்ட இந்த புத்தாண்டு வாழ்த்து அட்டையில் 'சுரபி' என்ற வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும் 20 அடி நீளம் உள்ளது. ஆங்கிலத்திலும், கன்னடத்திலும் எழுதப்பட்டுள்ள இந்த வாழ்த்து அட்டையைத் தயாரிக்க 118 கார்டுபோர்டு அட்டைகள் தேவைபட்டனவாம். இதனை எழுதி முடிக்க 28 நாட்களாயினவாம். இந்த சாதனைக்காக இந்த இளைஞரின் பெயர் கின்னஸில் இடம் பெற உள்ளது.

⊙ பிரபல லண்டன் பத்திரிக்கையான டைம்ஸ் வெளியிடும் குறுக்கெழுத்துப் புதிர்கள் மிகப்

பிரபலமானவை. பலர் மணிக்கணக்கில் விடைகண்டு பிடிக்க முடியாமல் தவிப்பார்கள்.லண்டனைச் சேர்ந்த ராய்டீன் என்பவர் 3 நிமிடம் 45-நொடிகளில் ஒரு புதிரின் விடையைக் கண்டுபிடித்து எழுதிச் சாதனை புரிந்திருக்கிறார்.

⊙ 25½ மணி நேரம் டேபிள் டென்னிஸ் விளையாடினார் ராஜிந்தர்சிங் சைனி என்பவர். கோரக்பூரைச் சேர்ந்தவர். இடைவேளை இன்றி விளையாடிய இவருடன் அடுத்தடுத்து 37-வீரர்கள் எதிரில் நின்று ஆட்டத்தைத் தொடர்ந்தார்கள். இது ஓர் உலக சாதனையாகும். ஆட்டம் நடந்த ஆண்டு 1992.

⊙ 400-மீட்டர் ப்ரீஸ்டைல் நீச்சலில் 3 நிமிடம் 45 வினாடிகள். இது உலக சாதனையாகும். பார்சிரோலானா ஒலிம்பிக்கில் யேவ்ஜெனி ஸடோவை என்ற ரஷ்ய வீரர் இதைச் சாதித்தார். தற்போது இதே பிரிவில் இந்திய சாதனை 4நிமிடம் 16,08 வினாடிகள். பெங்களூர் மாணவரான அபிஜித் என்பவர்தான் இந்தச் சாதனையைச் செய்தார்.

⊙ துப்பாக்கி சுடுதலில் ஜஸ்பால் ராணா 600 புள்ளிக்கு 589 புள்ளிகள் எடுத்தார். அண்மையில் செய்யப்பட்ட இச்சாதனைக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. இது ஆசியாக் கண்டச் சாதனையாகும்.

⊙ வார்சனாலோ-நேரோஸ் பிரிட்ஜ் என்ற உயரமான பாலம் 4 ருக்லின்-ஸ்டாலின் ஆகிய தீவுகளை இணைக்கிறது. இந்தப் பாலத்தின் உச்சியில் இருந்து உயிரைவிடக் குதித்தவர்கள் எவரும் பிழைத்தது இல்லை. ஆனால் காஸ்னீ மார்குரி என்ற புருக்லீனைச் சேர்ந்த 29 வயதுப்பெண் 240 அடிகளுக்கு மேல் அமைந்துள்ள உயரமான இடத்திலிருந்து தற்கொலை செய்து கொள்ளக் குதித்தாள். ஆனால் இவள் சில எலும்பு முறிவுகளுக்குப் பிறகு உயிர் பிழைத்துவிட்டாள். கான்கிரீட் மீது 45-மைல் வேகத்தில் மோதுவதற்குச் சமமான இந்தப் பாலத்தின் மீது விழும் சக்தியைத் தாங்கிக் கொண்டு உயிர் பிழைத்த இந்தப் பெண் நியூயார்க் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதோடு, கின்னஸ் சாதனையாளர் புத்தகத்திலும் இடம் பெற்றுவிட்டாள்.

⊙ 5000 தடவைகளுக்குமேல் மேடை நாடகங்களில் நடித்திருப்பதாலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட

எண்ணிக்கையில் திரைப்படத்தில் இடைவிடாது நடித்திருப்பதாலும் நடிகை மனோரமாவின் பெயர் 1988 ஆம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

⊙ முன்னாள் பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் கூட கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். வியப்பாக இருக்கிறதா? உண்மை. கடந்த பல ஆண்டுகளாக இவரது பெயர் கின்னஸ் புத்தகத்தில் இருந்து வருகிறது.

1977 ஆம் ஆண்டு ஜனதாஅலை நாட்டில் அடித்தபோது இவர் தனது 81-வது வயதில் இந்திய நாட்டின் பிரதமராக பதவி ஏற்றார். உலக வரலாற்றில் இந்த தள்ளாத வயதில் இவரைப்போல வேறு யாருமே இப்படிப்பட்ட பெரிய பதவிக்கு வந்தது இல்லையாம். எனவே இதுவும் ஒரு கின்னஸ் சாதனைதான்.வேறு எந்த நாட்டிலாவது 82-வது வயதில் யாராவது பிரதமராக வந்தால்தான் இந்த சாதனையில் இருந்து இவர் பெயர் நீங்கும் என்கிறார்கள் கின்னஸ் நிறுவனத்தார்.

⊙ பிரபல இசை மேதை செம்மங்குடி சீனிவாச அய்யர் சமீபத்தில் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார். காரணம் இடைவிடாது கடந்த 74-ஆண்டுகளாக இவர் கர்நாடக இசையைப் பாடிக்கொண்டிருப்பதுதான்.

⊙ செந்தில்முகுந்தன் நாதஸ்வரம் வாசிப்பதில் வல்லவர். தொடர்ந்து பல மணிநேரம் வாசித்து சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார்.

அடுத்து இவரது இலக்கு 48 மணி நேரம் தொடர்வதுதானாம்.

⊙ அஜய்குமார்கேதான். இவர் ஒரு மின்னணுப் பொறியாளர். இவர் ஒரு சிறிய கார்டில் 200 ஆண்டுகளுக்கான காலண்டரை உருவாக்கியுள்ளார்.

இச்சிறிய கார்டு அளவு கொண்ட காலண்டரில் கி.பி.1900 ஆண்டு முதல் கி.பி. 2000 ஆண்டு வரையிலான கிழமை, தேதி, ஆகிய விவரங்கள் உள்ளனவாம். ஆறே விநாடிகளில் குறிப்பிட்ட தேதிக்கான கிழமையைக் கண்டறிய முடியுமாம். இச்சாதனையை கின்னஸ் ஏற்றுக் கொள்ளப் போகிறது.

அஜய்குமார்- ஏற்கனவே சாவிக்கொத்து வளையத்தினுள் 500 ஆண்டுகளுக்கான காலண்டரை வடிவமைத்துள்ளார். இதுவே உலகின் மிகச்சிறிய காலண்டர் என்று கூறப்படுகிறது. இந்தச் சாதனை இதுவரை யாராலும் முறியடிக்கப்படவில்லை.

⊙ பிரான்சுக் நாயக் என்பவர் பிரபல குஜராத்தி நாடக அமைப்பாளர் மற்றும் நடிகர். இவர் தனது 69 ஆண்டு காலநாடக உலகில் தமது நாடகங்களை 22,455 முறை நடத்தி உலக சாதனை புரிந்து இருக்கிறார். இது உண்மையிலேயே பெரிய சாதனைதான்.

⊙ 'மாக்சிமா' இது ஒரு பசுவின் பெயர். இதற்கு ஆறுவயது ஆகிறது. கடந்த ஒரு வருடத்தில் மட்டும் இது கறந்த பாலின் அளவு 26,700 கிலோ லிட்டர். இந்தப் பசு கின்னஸ் புத்தகச் சாதனைப் பசுவாக 1975 முதல் இருந்து வந்த பீச்சர் அரிலிண்டா எல்லென் என்ற பசுவைக் கறப்பு விசயத்தில் பின்னே தள்ளிவிட்டது. 22,500 கிலோ பாலை வருடத்திற்குக் கறந்த இந்தப் பசுவைப் பசுக்களின் ராணியான நியூ உறம்ப்ஷயர் நகரத்து 'மாக்சிமா' இப்போது முறியடித்து கின்னஸ் புத்தகத்தில் நுழைந்து விட்டது.

⊙ பீட்டர் எலியட். இவர் ஒரு அமெரிக்கர். இவர்தான் உலகிலேயே அதிகத்தடவை சாதனை புரிந்த ரிலே ஓட்ட வீரர் நம்பர் ஒன். வெற்றி பெற்ற 4X800 ரிலே ஓட்டப் போட்டி அணியில் இவரும் ஓர் உறுப்பினர். 1500 மீட்டர் இன்டோர் போட்டியில் (ஸ்பெயினில் 1990-இல் நடந்தது) 3நிமிடம் 34.21 நொடிகளில் வந்து உலக சாதனை புரிந்தார். இவை தவிர நான்கு அவுட்டோர் உலக சாதனைகளையும் புரிந்துள்ளார்.

⊙ கொசு கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது என்றால் வியப்பில்லையா? உண்மையில் இடம் பெற்றிருக்கிறது.'உலகின் ஆபத்தான விலங்கு' என்ற பெயரோடு கின்னஸ் புத்தகத்தில் அமர்ந்திருக்கிறது.

மலேரியா நோயைப் பரப்பும் கொசு ஆதி காலத்திலிருந்தே மனித சமுதாயத்தில் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கைக்குப் பாதி பங்கை வகிப்பது சொசுக்களே. ஒவ்வொரு ஆண்டும் 200 மில்லியன் மக்கள் மலேரியாவினால் பாதிக்கப் படுகின்றனர். ஆப்பிரிக்காவில் மட்டும் ஒரு மில்லியன் குழந்தைகள் மலேரியாவினால் இறக்கின்றனர்.

⊙ சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் குறைந்த பந்துகளில் சதம் அடிப்பதில் புதிய சாதனை நடந்துள்ளது. இதைச் செய்து இருப்பவர் பாகிஸ்தானின் ஆல் ரவுண்டரான 18வயது ஷகித் அஃப்ரிடி. 37- பந்துகளில் 11-சிக்சர்களும் 6 பவுண்டரிகளும் அடித்து இந்தச் சாதனையைச் செய்துள்ளார். இலங்கைக்கு எதிராகக் கென்யாவில் நடந்த போட்டி இது. இதுவரை 48 பந்துகளில் சதம் அடித்ததுதான் உலக சாதனை. இந்த சாதனைக்குரியவர் ஜெயசூர்யா. பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த போட்டியில்தான் இது நிகழ்த்தப்பட்டது. எந்த அணிக்கு எதிராக ஜெயசூர்யா சாதனை நிகழ்த்தினாரோ அதே அணியைச் சேர்ந்த வீரர்தான் ஜெயசூர்யாவின் சாதனையை முறியடித் திருக்கிறார்.

⊙ 'மங்களாகௌர்' எனும் இந்திப் படத்தில் நடிகையாக சினிமா வாழ்க்கையை துவங்கிய லதாமங்கேஷ்கர்-'மஜ்பூர்' படம் மூலம் பாடகியாக மாறினார்.

அதற்குப்பின் வெற்றிமேல் வெற்றிதான். 1953-லிருந்து இன்றுவரை அவர்தம் ரசிகர்களை தனக்குள் வைத்திருப்பது பாராட்டுதலுக்குரியதாகும்.

நடிகை, பாடகி மட்டுமல்ல இவர். 'ராம்,ராம் பஉறினே' 'சாதே மன்சே' என்ற இரண்டு மராத்திய படத்திற்கும் இசை அமைத்து இசை அமைப் பாளராகவும் மாறி இருக்கிறார். லதாவின் குரலிலும் நாவிலும் சரஸ்வதி நடனமாடுவதாகச் சொல்வார்கள்.

இதுவரை இவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 20,000 ஆகும். இந்த சாதனைக்காக லதாவின் பெயர் கின்னஸில் இடம் பெற்றுள்ளது.

⊙ உலகிலேயே நீண்ட நேரம் நடைபெற்ற குத்துச் சண்டை சாதனை இது.

1893-ஆம் ஆண்டு 'நியூ ஆர்லியன்'சில் நடைபெற்ற போட்டிதான் அது. அமெரிக்காவைச் சேர்ந்த ஆண்டிபோவன், ஜாக்பர்க் என்ற இரு வீரர்களும் ஏழுமணி நேரம் தொடர்ந்து சண்டையிட்டு, மிகவும் களைப்படைந்ததால், 110 ரவுண்டுகளுக்குப் பிறகு போட்டி 'டிரா'வில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.

⊙ சிறிய வயதில் புத்தகம் எழுதி உலக சாதனை புரிந்தவர் 'டூரோத்தி' என்ற சிறுமி. இவர் தனது நான்காவது வயதில் 1962 -ஆம் ஆண்டு

'How the world began' என்ற புத்தகத்தை எழுதினார். அந்த புத்தகம் 1964-இல் அச்சிடப்பட்டு அமெரிக்காவில் வெளிவந்தது.

⊙ கேதலின் லின்ட்சே தென் அமெரிக்காவைச் சேர்ந்த பெண்மணி. இவர்தான் உலகிலேயே அதிக நாவல்களை எழுதியவர். எழுதிய நாவல்கள் 904. ஆறு புனைப் பெயர்களில் எழுதி உலக சாதனை புரிந்தார்.

⊙ அகதா கிறிஸ்டி என்பவர் மர்மகதை எழுத்தாளர். இவர் எழுதியவை 87 நாவல்கள். இவை உலகம் முழுதும் 300 மில்லியன் பிரதிகள் விற்பனையாகி உள்ளன. இவருடைய நாவல்கள் 103 மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இது ஓர் உலக சாதனை.

⊙ கை குலுக்குவதில் பழைய சாதனை 1988 ஆம் ஆண்டு மே மாதத்தில் பின்லாந்து நாட்டுக்காரர் 8 மணி நேரத்தில் 19ஆயிரத்து 592 பேர்களின் கைகளைக் குலுக்கிய தேயாகும்.

இக்குலுக்கலை முறியடிக்கும் வகையில் கனடாவைச் சேர்ந்த ஸ்காட் என்பவர் 'எக்ஸ்போ 82' கண்காட்சியில் 8மணி நேரத்தில் 25 ஆயிரத்து 289 பேர்களின் கைகளைக் குலுக்கி புதிய சாதனை படைத்துள்ளார்.

⊙ சதிஷ்நாராயணனுக்கு வயது இருபத்தைந்து. இளம் பிள்ளைவாத நோய் காரணமாக இருகால்களும் ஊனமான இவர், தனக்கு உதவியாக ஊன்றுகோலின் துணையுடன் வித்தியாசமாக குதித்து நடனமாடி பார்வையாளர்களைக் கவர்ந்து வருகிறார். இவரின் இந்த சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்து விட்டது. இவர் ஒரு பட்டதாரியும் கூட.

⊙ சைக்கிள் ஓட்டுவதில் ஒரு புதிய உலக சாதனை பிரான்ஸ் நாட்டில் நிகழ்த்தப்பட்டது. ஒரு மணி நேரத்தில் 52-270 கி.மீ. தூரத்தைக் கடந்துள்ளார் சாம்பியனான கிரிஸ் போர்டுமன். இவர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். இவர் மணிக்கு 51.6 கி.மீ. என்ற சாதனையை முறியடித்தார்.

⊙ 'பினாரா' என்ற கோபுரங்கள் குவைத்தில் உள்ளவையாகும். இக்கோபுரங்களில் மிகவும் உயரமானது 82 மீட்டர்கள் கொண்டவையாகும். குவைத்திலுள்ள பிரிட்டிஷ் ராயல் கப்பல் படையைச் சேர்ந்த வீரர் ஒருவர் இந்த உயரமான கோபுத்தில் இருந்து தலைகீழாக பல்டி அடித்து சாதனை ஒன்றை எல்லோரும் வியக்கும்படி செய்து காட்டியுள்ளார். அவரது இடுப்பிலும் காலிலும் பாதுகாப்பு ரப்பர் கட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இருந்தாலும் இது ஒரு துணிச்சலான சாதனை என்று யாவரையும் பேச வைத்துவிட்டார்.

⊙ உலகப் புகழ் பெற்ற 'பாப் பாடகியும், நடிகையுமான 'மடோனா' உலக சாதனைப் புத்தகத்தில், உலகின் மிகவும் வெற்றிகரமான பாடகியாக இடம்பெற்றுள்ளார். ' TRUE BLUE' என்ற பெயருடைய அவரது ஆல்பம் 11மில்லியன் பிரதிகள் விற்பனை ஆயிற்றாம்.

⊙ உலக சாதனைகளை அதிக அளவில் முறியடித்த பெருமை சோவியத் யூனியனைச் சேர்ந்த அலெக்ஸெவ் என்கிற பளுதூக்கும் வீரருக்கு உண்டு.

இவர் 80-முறை உலக சாதனைகளை முறியடித்த சாதனையாளர்களுக்கு எல்லாம் சாதனையாளர் போலும்.

⊙ புகழ் பெற்ற உறாலிவுட் நடிகைககள் பலர் இருந்த போதிலும் எல்லார் மனதிலும் இடம் பிடித்தவராக இருப்பவர் கேதரின் ெஉறப்பர்ன்தான்.

காரணம், நடிப்புப்க்காக நான்கு முறை ஆஸ்கார் பரிசுகள் வாங்கி கின்னஸ் புத்தகத்தில் இடம் போட்டு விட்டார். தவிர, கணவரும் நடிகருமான ஸ்பென்சர்ட்ரேசியுடனான இவரது குடும்ப வாழ்க்கை பல ஆண்டுகள் மகிழ்ச்சிகரமாக இருந்தது. உறாலிவுட்டில் இதையும் ஒரு சாதனையாகத்தான் கூற வேண்டும். ட்ரேசியும் ஆஸ்கார் பரிசு வாங்கிய நடிகர்தான்.

⊙ 1994 ஆம் ஆண்டின் மிக நீளமான பெயரினை வைத்துக் கொண்டவர் என்ற பெருமை இந்தியாவைச் சேர்ந்த ஒருவருக்குக் கிடைத்துள்ளது.

இவர், பீகார்மாநிலத்தின் மதுபானி நகரத்தினைச் சேர்ந்த உறியாமா என்ற பெண்மணி ஆகும். இவர் மூன்று குழந்தைகளுக்குத் தாய். இவரது கணவர் ஒரு வங்கியில் பணியாற்றி வருகிறார்.

இவரது நீண்ட பெயரில் முதல் பெயர் உஷியாமா இறுதி பெயர் சௌத்ரி. 1994 ஆம் ஆண்டின் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றார்.

இவரது முழு பெயரில் 2008 ஆங்கில எழுத்துக்களால் அமைக்கப்பட்டவை. இந்தியில் 161 வார்த்தைகளில் அமைக்கப் பட்டு உள்ளது.

இதற்கு முந்தைய உலக சாதனை 1019-எழுத்துக்கள் ஆங்கிலத்தில். அவர் அமெரிக்காவின் டெக்சாஸ் நகரைச் சேர்ந்த பெண்மணி ஆவார்.

⊙ ஜெயராம் இவர் திருச்சி மாவட்டம் வேப்பூரைச் சேர்ந்தவர். இவர் கொஞ்சம் வித்தியாச மானவர். கின்னஸில் இடம் பிடிப்பது போல் ஏதாவது செய்ய வேண்டும் என்று இவருக்குள் ஓர் ஆசை. ஒரு நாள் கின்னஸ் புத்தகத்தைப் புரட்டிச் கொண்டிருந்தார்.

அதில் ஜமைக்கா நாட்டுக்காரர் ஒருவர், தொடர்ந்து 50 மணி நேரம் கைதட்டி சாதனை செய்திருப்பதைக் கண்டார். அதை முறியடித்துக் காட்ட வேண்டும் என்று ஜெயராமனுக்குள் ஆர்வம்.

விசயத்தை சென்னை ஐ.ஓ.பி வங்கியில் பணியாற்றி வரும் நிர்மலுக்கு எழுதிப்போட்டார். ஏற்பாடுகள் நடந்தன.

12.2.88 அன்று, போலியோ மருத்துவநிதிக்காக அந்த நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து 67-மணி நேரம் 5நிமிடத்துக்கு தட்டோ தட்டு என்று கை தட்டி தீர்த்துவிட்டார். கின்னஸ் புத்தகத்திலும் இடம் பிடித்து விட்டார்.

⊙ பிரிட்டனைச் சேர்ந்த புகழ்ப் பெற்ற பெண் எழுத்தாளர் 'உர்சுலாப்ளூம் இவர் தனது 91-வது வயதில் காலமானார். இவர் எழுதிய எல்லாமே காதல் கதைகள்தாம். 1976-ஆம்ஆண்டில் மட்டும் 50-க்கும் மேற்பட்ட முழுநாவல்களை எழுதிப் பிரசுரித்ததற்காக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றவர் ஆவார். இவரது முதற்கதை வெளியான போது இவரது வயது எட்டே எட்டுதான்.

⊙ ஜெனிபர் என்ற பெண்ணுக்கு ஒரு அடி இரண்டு அங்குல நீளமுடைய தாடி இருந்தது. அவளது சாதனையை இன்றுவரை யாராலும் கின்னஸ் புத்தகத்தில் இருந்து முறியடிக்க முடியவில்லை.

⊙ ஒருவர்பின் ஒருவராக, ஈவு இரக்கமின்றி மனிதர்களைக் கொலை செய்யும் வெறியர்களை 'SERIAL KILLERS' என்று கூறுகிறோம்.

நவீன காலத்தில் இத்தகைய கொலைகார்களில் மிகக் கொடியவனாக விளங்கியவன் 'PEDRO ALONSOLOPEX' என்பவன். தென் அமெரிக்க நாடுகளான கொலம்பியா, பெரு, ஈக்வடார் ஆகியவற்றில் 1973க்கும் 1980க்கும் இடைப்பட்ட காலத்தில், சுமார்300 பெண்களைக் கொன்று விட்டதாக இவன் ஒப்புக் கொண்டான். இவர்களில் ஒரு பெண் கூட 10 வயதிற்கு மேற்பட்டவள் இல்லை. இந்தக் கொடிய 'சாதனைக்காக கின்னஸ் புத்தகத்தில் இவன் பெயர் இடம் பெற்றுள்ளதாம்.

⊙ 1993 ஆம் ஆண்டு ரிச்வில்சனும் பில்பை வெங்கா என்பவரும் படகு மூலம் ஸான் பிரான்ஸிஸ் கோவிலிலிருந்து பாஸ்டன் பகுதியை அடைந்தார்கள். தென்அமெரிக்காவில் உள்ள தன்னம்பிக்கை முனையை இப்படிச் சுற்றிவர 69 மணி நேரம் ஆகின. இதன் மூலம் இதே பயண தூரத்தை 140 ஆண்டுகளுக்கு முன்பு ஏழு நாட்களில் கடந்த சாதனையையும் முறியடித்தார்கள்.

⊙ தாய்மார்கள் சொல்வார்கள் என் பொண்ணோட கூந்தலை அவுத்துவிட்டா தரையிலே அப்படியே புரளும்' என்று சொல்வார்கள்.

அப்படி கண்டவர்கள் குறைவு. ஆனால், 'டயானி விட்' என்ற பெண்ணின் கூந்தலை அவிழ்த்துவிட்டால் உண்மையிலேயே தரையை நடக்கும் போது கூட்டும்.

இவரது கூந்தலை 1993-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் அளந்தபோது அது 12 அடி 8 அங்குலம் இருந்தது.

5அடி 7 அங்குலம் உயரமுடைய டயானிவிட் ஒரு மாடலிங் அழகி. நடிகையும் கூட. கின்னஸ் சாதனையார் புத்தகத்தில் இவரது மிக மிக நீண்ட கூந்தலுக்காக இடம் பெற்றிருக்கிறார்.

⊙ ஸ்பீட் ஸ்கேட்டிங் விளையாட்டால் மூன்று உலக சாதனைகளை சாதித்த வீரர் ஜான் ஓலவ்கோஸ். 3000, 5000, 10,000 மீட்டர் தூரங்களில் இதைச் சாதித்தவர். நீண்ட தூர ஸ்கேட்டிங்கில் வெற்றி பெற மன உறுதி மிக அவசியம்.

இவர் 1991 ஆம் ஆண்டு உலக சாதனை செய்தபோது 157 புள்ளிகள் எடுத்தார். சாதனை நிகழ்த்திய இடம் நெதர்லாந்து நாட்டில். இவர் நார்வே நாட்டைச் சேர்ந்தவர்.

⊙ 12-வயதாகும் சையத் அப்ராருதீன் எனும் இச்சிறுவன் உலகமே வியக்கும் வண்ணம் ஒரு சாதனையைப் படைத்துள்ளான். பாகிஸ்தானைச் சேர்ந்த இச்சிறுவன் இஸ்லாமிய வேதமான குர்ஆனை முழுமையாக அழகிய தொனியில் பார்க்காமல் அப்படியே ஒப்பிக்கிறான்.

அதுமட்டுமல்ல,எந்தப் பகுதியிலிருந்து குர்ஆன் வசனத்தைக் கேட்டாலும் பட்பட் என்று சொல்லி விடுகிறான். 860 பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் சவூதி அரேபியாவில் புனித மக்கா நகரில் கலந்து கொண்ட போட்டியில் இச்சிறுவனே வென்று அனைவரையும் வியப்படையச் செய்து வருகிறான்,இந்த சாதனைச் சிறுவன்.

⊙ 1989-ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதி ராஞ்சியில் உள்ள ராஜேந்திரா மெடிக்கல்

காலேஜைச் சேர்ந்த டாக்டர் உறரிதாப் நாராயண்சிங் இரண்டு நிமிடத்தில் 22 வாழைப்பழங்களை உரித்து விழுங்கியிருக்கிறார். ஒவ்வொரு வாழைப் பழத்தின் எடை சராசரி 84.1 கிராம். இவரைத் தொடர்ந்து ஜுன் 16.1992 ஆம் ஆண்டு இமாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரவீன்குமார் சர்மா என்பவர் 9 நிமிடங்களில் 62-வாழைப்பழங்களைச் சாப்பிட்டு சாதனை படைத்து இருக்கிறார்.

⊙ ஆன்.எ.மென்உறினிக் என்பவர் பிரிட்டனைச் சேர்ந்தவர். இவர் உற்பத்தி செய்த எலுமிச்சம் பழம் ஒன்றின் எடை 4.805 கிலோ கிராம் இருந்திருக்கிறது.

உலகில் இதுவே பெரிய பழம் என்பதால் கின்னஸ் புத்தகத்திலும் இடம் பிடித்திருக்கிறது.

1984 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் பறிக்கப்பட்ட ஓர் அன்னாசி பழத்தின் எடை 7,96 கிலோவாக இருந்தது.

1978 ஆம் ஆண்டு பிரேசில் நாட்டின் டாராவகா பகுதியில் ஒவ்வொரு அன்னாசிப் பழமும் சராசரியாக 13 கிலோ வரை எடை கொண்டதாக இருந்ததாகப் பதிவு செய்துள்ளனர்.

⦿ இளைஞனின் பெயர் ரெபிளேசினா வயது 25. பெண்ணின் பெயர் பாபிஹெஷர்லாக் வயது 21. இருவரும் காதலர்கள்.

இவர்கள் இருவரும் அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்திலுள்ள 'பிட்ஸ்பர்க்' நகரில் இடைவிடாது 190 மணி நேரம் கட்டித்தழுவி முத்தம் கொடுத்து கின்னஸ் புத்தகத்தில் சுவை சேர்த்து இருக்கிறார்கள்.

முத்துக் குளித்து சாதனை புரியும் உலகில் முத்தம் கொடுத்தும் சாதனை செய்யலாம் என்று நினைத்தார்களோ?

⦿ மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த ஓட்டப்பந்தய வீரரின் பெயர் உறிகம் எல் குரோஜ் என்பதாகும்.

ரோமில் நடைபெற்ற 'IAAF' கோல்டன் காலா ஓட்டப் பந்தய விளையாட்டுப் போட்டியில் 1500 மீட்டர் தூரத்தை இவர் வெறும் 3.26 நிமிடத்தில் கடந்து உலக ரிகார்டு ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்.

இது புதிய உலக சாதனை.

⊙ ராப்பை என்பவருக்கு 'பீமா' என்ற பெயரும் உண்டு. இவர் திருச்சூரைச் சேர்ந்தவர். 53 வயதாகும் இவர் 11-வயதில் பள்ளியை விட்டு நின்று விட்டார். காரணம் படிப்பு வரவில்லை.

ஆனால் சாப்பாடு மட்டும் பீமனைப் போல் சாப்பிட முடிந்தது. அதனால்தான் 'பீமன்' என்ற பெயர் இவருக்கு. காலையில் 70 இட்லிகளுடன் சாப்பிடத் தொடங்கும் இவர் கூடவே 2-லிட்டர் காபியும் குடிப்பாராம். பதினொரு மணியளவில் பசி எடுத்தால் 'மினி' லஞ்ச். இல்லை எனில் பகல் ஒரு மணிக்குச் சோற்றை மலைபோல் குவித்து பருப்பு, காய்கறிகள் என சாப்பாட்டைச் சாப்பிடுவாராம். போட்டி என்று வந்து விட்டால் 6 ஆட்கள் சாப்பாட்டைச் சாப்பிடுவாராம். இரவு 7 மணிக்குப் போதுமென்று சொல்லுமளவிற்கு உப்புமா டீ அல்லது 30 சப்பாத்தி சாப்பிடுவாராம்.

1991 ஆம் ஆண்டு வைத்த சாப்பாட்டுப் போட்டியின் போது 750 இட்லியும் 3 வாழைப்பழமும் சாப்பிட்டு சாதனை படைத்து இருக்கிறார்.

ஒரே மூச்சில் 100 மசாலா தோசையும் 85 வாழைப்பழங்ளும் 25 லிட்டர் பாயாசமும் சாப்பிடும் திறமையும் இவருக்குண்டு.

⊙ நினைத்தபோது யாராலும் தும்ம முடியாது. ஆனால் தம்மால் முடியும் என்று ஜலந்தரைச் சேர்ந்த 44 வயதாகும் விஜயகுமார் நிரூபித்திருக்கிறார்.

ஏதோ நோயின் காரணமாக 20 ஆண்டுகளாகத் தும்மலே வராமல் இருந்த விஜயகுமாருக்குத் தும்மல் போட்டுத்தான் பார்ப்போமே என்று தோன்றவே தும்மல் போட்டார். என்ன வியப்பு! பயங்கரமாகத் தும்மல் வந்தது.

1968 ஆம் ஆண்டு கல்கத்தாவில் இருந்த போதுதான் தனக்குள் இப்படி ஒரு அபூர்வ சக்தி இருப்பது தெரிந்ததாம்.

அன்றிலிருந்து இவர் நினைத்தால் போதும் சர்வ சாதாரணமாகத் தும்மல் வருகிறது. இது கடவுளாகக் கொடுத்த வரம் என்று கருதும் இந்த மளிகை வியாபாரி நிமிடத்திற்கு 40 தும்மல் போட்டு சாதனை புரிந்திருக்கிறார்.

ஒரு மணி நேரத்தில் 500 முதல் 600 தும்மல் போடுகிறாராம்.

⊙ பெரிய பிரமுகர்கள் சந்தித்துக் கொள்ளும் போது ஒருவருக்கொருவர் கை குலுக்கிக் கொள்ளும் வழக்கத்தை மேல் நாடுகளில் மிகவும் அக்கறையோடு கடைபிடித்து வருகிறார்கள்.

சமீபத்தில் அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது தன்னைச் சந்தித்த அத்தனை பேர்களுடனும் சம்பிரதாய முறைப்படி கை குலுக்கினார்

ஒரே நாளில் 3,609 பேர்களுடன் கை குலுக்கினார். ஒரே நாளில் இத்தனை பேர்களுடன் கைக் குலுக்கியது அவராகத்தான் இருக்க முடியும். இச் சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறப்போகிறதாம்.

⊙ 1960, செப்டம்பர் 26 ஆம் தேதி கியூபா ஜனாதிபதி ஓர் உலக சாதனை செய்தார். அன்றைய தினம் ஐ.நா. சபையில் 269 நிமிடங்கள் இடைவிடாது பேசி சாதனை புரிந்தார்.

⊙ உலகிலேயே மிக அதிக வயதானவராக கின்னஸ் புத்தகத்தில் தன் பெயரைப் பதிந்திருந்தவர் 'ஜான் இவான்ஸ்'

இவர் வேல்ஸ் நாட்டைச் சேர்ந்த 112 வயது மனிதர். இவருக்கு மூன்று மகன்கள். ஒரு பெண். ஆறு பேரன், பேத்திகள். ஒன்பது கொள்ளுப்பேரன் பேத்திகள்.

⊙ தீபக் என்ற இளைஞர் புது தில்லியில் வாழ்கிறார். 21 வயது. இவருக்கு ஒரு காதலி. காதலிக்கு தீபக் ஒரு நாள் ஒரு கடிதம் எழுதினார். எப்படித் தெியுமா?

ஒரு தலை முடியை எடுத்து அதை குறுக்கு வாட்டில் ஏழு பாகங்களாக வெட்டி, அதனால் ஒரு தூரிகை செய்து அந்த தூரிகையினால் ஒரு அரிசியில் 225 முறை 'ஐ லவ் யூ' என்று எழுதி அதை தன் அருமைக் காதலிக்கு அனுப்பி வைத்தார்.

இம் மாதிரி சிறு தானியங்களில் படங்கள் வரைவதில தீபக் கைதேர்ந்தவர். ஒரு அரிசியில்

813 படங்கள் வரைந்ததற்காக இவரது பெயர் 1991 ஆம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறது.

இம் மாதிரி சிறு படங்கள் வரைவதற்குக் கண் பார்வை மிகக் கூர்மையாக இருக்க வேண்டும். என் கண்கள் மிக சக்தி வாய்ந்தவை. அதனால் என் சாவுக்குப் பிறகு அவைகளை தானம் செய்துவிடப் போகிறேன். இப்போதே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டேன் என்கிறார் இந்த இளைஞர். தீபக்.

⊙ உலகிலேயே மிக நீளமான மாமிசம் உள்ள ரொட்டி உணவை மாணவ மாணவிகள் சேர்ந்து தயாரித்து உலக ரிக்கார்டு புத்தகமான கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்து விட்டனர்.

தெற்கு தைவானின் கோசியாங்க் நகரைச் சேர்ந்த இந்த மாணவ மாணவியர்கள் நீளமான மேஜைகளைப் போட்டு ரொட்டி தயாரிக்கும் காட்சி கண்கொள்ள ஒன்றாக இருந்ததாம். இந்த ரொட்டியின் நீளம் 600 மீட்டராகும். 500 கிலோ மாவும் 1400கிலோ மாமிசமும் இந்த ரொட்டிக்குப் பயன்படுத்தி உள்ளனர்.

⊙ எம்.சி. மோடி இவர் பெங்களூரைச் சேர்ந்தவர். கண் அறுவை சிகிச்சை நிபுணர்.

இவர் சுமார் ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட கண் அறுவை சிகிச்சையினைச் செய்துள்ளார். இந்த 'கண்'ணான சாதனைக்காக இவர் பெயர் கின்னஸில் இடம் பிடித்து இருக்கிறது.

ஒரு இந்தியர் இந்த சாதனையைப் புரிந்தது நமக்கெல்லாம் பெருமை என்றே கருத வேண்டும்.

⊙ மைய அரசின் வரவு-செலவு திட்டம் பற்றி பொது மேடைகளில் 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆண்டுதோறும் உரையாற்றி வருகிறார் புகழ்பெற்ற வழக்கறிஞரும், வரி விதிப்புத்துறை வல்லுநருமான நானி பால்கிவாலா.

1992-இல் பட்ஜெட் பற்றிய தனது தேர்ந்த கருத்துக்களைப் பற்றி உரையாற்றியபோது, சுமார் ஒரு லட்சம் பேர் அதைக் கேட்டனர். மைய பட்ஜெட் பற்றிய அதிக எண்ணிக்கையிலான உரைகள் ஆற்றியவர் என்று இவரது பெயர் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறார்.

⊙ இரத்தினக் கற்கள் வகையில் உயர்ந்த ரக சிவப்புக் கற்கள் மியனாமரிதான் கிடைக்கின்றன. உலகிலேயே மிக மிகப் பெரிய சிப்புக்கல் ஒன்று மேகாக் இரத்தினச் சுரங்கத்தில் இருந்து கிடைத்துள்ளது.

இந்தக் கல்லின் எடை 21450 காரட். அளவு ஐந்துக்கு ஏழு அங்குலம். தூய்மையான கல் இது. இதன் விலை இன்னும் மதிப்பிடப்படவில்லை என்று இரத்தின ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 1985 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஒரு சிவப்புக்கல் கின்னஸ் புத்தகத்தில் பதிவாகப் போகிறது.

⊙ ஒரு நிமிடத்திற்கு 117 வார்த்தைகளை டைப் செய்த பஞ்சாபைச் சேர்ந்த அப்ஷேக் ஜெயின் என்கிற 15 வயது பள்ளி மாணவன்தான் அண்மையில் உலக சாதனையாளன் என்கிற பட்டத்தை வென்றுள்ளான்.

துருக்கி நாட்டில் நடந்த உலகப் போட்டியில் அவன் இந்தப் பட்டத்தைப் பெற்றான்.

⊙ சியோலில் வினோதமான சாதனை ஒன்று செய்யப்பட்டுள்ளது. கீநாத் ஊேறடாங்க் என்னும் மல்யுத்த

வீரர் 8 மணி நேரத்தில் 28,233 பேரிடம் கை குலுக்கியுள்ளார். இச்சாதனை கின்னஸிற்குரியது.

மேலும் இவரே 10-கேன் அளவுக்குப் பானங்கள் அருந்தி சாதனை செய்து உள்ளார்.

ஆனால் ஒரு முறை கூட மலம் கழிக்க வில்லையாம்.

இதற்கு முந்திய சாதனை லோமன் பிராபி என்பவரால் செய்யப்பட்டது. அவர் 21,276 பேரிடம் கை குலுக்கி இருக்கிறார்.

⊙ 1995 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மொராக்கோ நாட்டு வீராங்கனை சாலேஉறிஸ்ஸௌ பத்தாயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் உலக சாதனை புரிந்தார்.

1996-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில் இதே பந்தயத்தூரத்தை 26-நிமிடம் 38.08 விநாடிகளில் கடந்து மீண்டும் உலக சாதனை புரிந்துள்ளார். கடந்த முறையைவிட 5 விநாடிகள் முன்னதாக ஓடி வந்துள்ளார்.

⊙ பிரிட்டனைச் சேர்ந்த 'கிராமி ஒபரி' என்ற சைக்கிள் வீரர் அண்மையில் நான்கு கிலோ மீட்டர் தூரத்தை 4 நிமிடம் 20.89 விநாடிகளில் கடந்து உலக சாதனை புரிந்துள்ளார். இந்த மின்னல் வேக சாதனை கின்னஸில் இடம் பிடிக்க உள்ளது.

⊙ ராஜன் தேசாய் என்பவர் மும்பேயில் உள்ள விளம்பர நிறுவனத்தின் தலைவர். இவருக்கு 43-வது பிறந்த நாள் வந்தது. இந்தப் பிறந்த நாளை ஒட்டி ஏராளமான வாழ்த்துக்கள் இவருக்கு வந்தாலும் 43-மடிப்புகளுடன் கூடிய 124 அடி நீள வாழ்த்து அட்டை ஒன்று வித்தியாசமாக வந்திருந்தது. பெரிதாகவும் இருந்தது. இவர் இந்த 43 மடிப்புக் கொண்ட வாழ்த்து அட்டையைப் பிரிக்கவே இவருக்கு அரை மணிநேரம் ஆயிற்றாம். இதை ஆதித்தியா என்பவரால் அவரது குழுவினரும் ராஜன் தேசாயிற்கு அனுப்பியிருந்தார்கள்.

உலகிலேயே மிக நீண்ட பிறந்தநாள் வாழ்த்து அட்டையாக இது மாறி விட்டது. இதற்கு முன்பு பிரிட்டிஷ் அரசு குடும்பத்திற்குத்தான் இப்படி நீண்ட அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் அதை

முறியடித்து விட்டது இது. ராஜன் பெற்ற வாழ்த்திதழ் 9 அடி நீளம் அதிகம்.

⊙ சீனாவின் தலைநகரான பெய்ஜிங்கில் உள்ள ஒருஷாப்பிங் சென்டரில் தினமும் காலையில் கிரேன் மூலம் இது ஏற்றி வைக்கப்பட்டு மாலையில் இறக்கி வைக்கப்படுகிறது.

அப்படி எதைப்பற்றி இறக்குகிறார்கள் என்றால்- உலகிலேயே மிகவும் நீளமான ஜீன்ஸைதான். இதன் நீளம் 32 மீட்டர். எடை 370 கிலோ.

இந்த 'லீ' ஜீன்ஸ் பேண்ட், கின்னஸ் சாதனையில் சேர்ந்து விட்டது.

⊙ 'எல்லா' சாதனைகளும் கின்னஸில் இடம் பெறலாம் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த லூய்திவின் என்ற இருபத்தைந்து வயது இளம் மங்கை செக்ஸ் வீடியோ படத்தில் தொடர்ந்து தினமும் இரண்டு மூன்று மணி நேரம் என நடித்து 460 நாட்கள் சாதனை புரிந்திருக்கிறார்.

இப்படி இடைவெளியின்றி இவர் தினமும் நடித்து கொடுத்த வீடியோபடங்களின் எண்ணிக்கை 120-க்கு மேல்- ஆங்கிலம், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி என அனைத்து மொழிப்படங்களிலும் இவள் நடித்ததினால் உலகெங்கும் இவளுக்கு ரசிகர்கள் இருக்கிறார்கள்.

இவளின் இந்த 'சாதனை'யைக் கின்னஸ் புத்தகத்திற்கும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

⊙ டேவிட் கன்ட் என்பவர் அமெரிக்காவின் மிகோட்டா மாநிலத்தில் உள்ள வசீகா என்ற இடத்தில் பிறந்தவர்.

இவர்தான் உலகை முதன்முதலாக நடந்தே வலம் வந்து சாதனை புரிந்தவர். இந்த அமெரிக்கர் 1970 ஆம் ஆண்டு ஜூன் 20-நாள் இவரது இல்லத்திலிருந்து கால்நடையாகப் புறப்பட்டார்.

தனக்கு வேண்டிய பொருள்களை ஏற்றிக் கொள்ள ஒரு கோவேரிக் கழுதையைக் கூட்டிக் கொண்டதோடு துணைக்கு தனது சகோதரரையும் கூட்டிக் கொண்டு முதலில் அமெரிக்கா, அதன்பிறகு ஐரோப்பா, ஆசியா,

ஆஸ்திரேலியா என வரிசையாக ஒவ்வொரு நாட்டிற்கும் தமது நடை பயணச் சாதனையைத் தொடர்ந்தார்.

வழியில் ஆப்கானிஸ்தானில் அவ்வூர் முரடர்களால் இவரது சகோதரர் கொல்லப்பட்டார்.

அதன் பிறகு டேவிட் கன்ட் தமது மற்றொரு சகோதரரைத் துணைக்கு வரவழைத்து மீண்டும் தமது பயணத்தைத் தொடர்ந்தார்.

இவ்வாறு நான்கு ஆண்டுகள் சுற்றி வந்து 1974 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ஆம் தேதி மீண்டும் தாம் புறப்பட்ட இடமான தமது இல்லத்துக்கு வந்து சேர்ந்தார்.

வழிப்பயணத்தில் பல அனுபவங்களைக் கண்டு, கேட்டு பலவித சூழ்நிலைகளைச் சந்தித்து தமது ஊர் திரும்பிய டேவிட் கன்ட்டின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்தியாவில் பல அம்சங்கள் இவரது இதயத்தைத் தொட்டது என்று கூறியுள்ளார்.

⊙ ஸ்பானிஷ் நாட்டின் பல மாநிலங்களைச் சேர்ந்த பாராசூட் வீரர்கள் வானத்தில் இருந்து பறந்தபடி கீழே பாராசூட்டுடன் குதித்து விதவிதமான வடிவங்களை கை கால்களைக் கோர்த்தபடி அமைத்தார்கள். வானத்தைப் பிரமிப்புடன் பாராசூட் விளையாட்டில் பார்க்கச் செய்த இவர்களின் மொத்த எண்ணிக்கை 33 பேர்.

10.5.95-நிகழ்த்தப்பட்ட இந்த பாராசூட்-ஜம்பிங் -ஃபார்மேஷன் சாதனை முந்தைய 32. பேர்களின் சாதனையை முறியடித்திருக்கிறது.

⊙ உலகிலேயே மிக உயரமான மிகப் பெரிய ராட்சத உருவில் நாற்காலி ஒன்றினைச் செய்து காட்டி உலக சாதனையைப் படைத்துள்ளார். ஜெர்மனியில் உள்ள யூடினஸ் நகரைச் சேர்ந்த ஆலிவர் பீர்காப் என்பவர்.

இந்த ராட்சத நாற்காலியின் மீது ஒரு மேஜையைப் போட்டு அமர்ந்தபடி பத்திரிக்கையாளருக்குப் பேட்டிக் கொடுத்தாராம். 'பீர்காய்' இந்த நாற்காலியின் உயரம் 20 மீட்டராகும். இதன் மொத்த எடை 910 கி.கி. ஆகும். கின்னஸ் ரிகார்டில் இடம் பிடிக்கப் போகிறது.

⊙ 1979-ஆம் ஆண்டில் 'OFF THE WALL' எனும் ஆல்பத்தினை வெளியிட்டார். அது ஒரு கோடியே 10-இலட்சம் பிரதிகள் விற்பனையாகின.

1982 ஆம் ஆண்டு இவர் பாடிய 'THIRILLER' ஆல்பம் வெளியானது. 4 கோடியே 60 இலட்சம் பிரதிகள் விற்பனை ஆகி ஒரு சாதனையை ஏற்படுத்தி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துவிட்டது.

⊙ நம் நாட்டில் கார் பைக் லாரி ஆகியவைகளைப் பல்லால் கட்டி இழுப்பவர்களைப் போல் கனடா நாட்டில் வசிக்கும் போல் என்பவர் மூன்று டன் எடையுள்ள பெரிய டிராக்டரை தனது முதுகின் மேல் ஏற்றி சாதனை படைத்துள்ளார்.

ரிமோட் கண்ட்ரோல் உதவியுடன் இவர் தரையில் படுத்திருக்கும்போது இவரின் உதவியாளர் இயக்க டிராக்டர் தானே வந்து இவரின் முதுகின் மேல் ஏறி இறங்குகிறதாம்.

பொது மக்கள் முன்னிலையில் இவர் செய்து வரும் இந்தச் சாதனையைப் பாராட்டி கின்னஸ் புத்தகம் பரிசு வழங்கியுள்ளது.

⊙ 1934-ஆம் ஆண்டு பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த 'ஜார்ஜ் கோல்டானோஸ்கி' என்பவர் கண்களைக் கட்டிக் கொண்டு சதுரங்கம் விளையாடினார். அதில் 24-பேரைத் தோற்கடித்தார். மீதி போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிந்தன. இது ஒரு உலக சாதனை.

⊙ அமெரிக்காவின் உலகப் பறங்கிக்காய் சம்மேளம் நடத்திய போட்டியில் பரிசு பெற்ற பறங்கிக்காயின் எடை 739.5 பௌண்டு.

இதுதான் உலகின் பெரிய பறங்கிக்காய். இந்த சாதனைக்குரிய பறங்கிக்காயை விளைவித்த நாடு உறாலந்து. இது விளைந்த ஆண்டு 1992.

⊙ ஓவியர் லியோனர்டோடாவின்ஸி மூச்சை அடக்கி மிக நீண்ட நேரம் நீருக்கடியில் மூழ்கி இருப்பதில் வல்லவர்.

ஆனால் அதிக நேரம் மூச்சை அடக்கும் ரகசியத்தை அவர்யாரிடமும் தெரிவிக்காமல் இறந்து விட்டார்.

1994-இல் ஸ்வீடனைச் சேர்ந்த பீட்டர் உறிர்வெல் நீரின் அடியில் ஆறு நிமிடம் 3 விநாடி மூச்சை அடக்கி மூழ்கி இருந்தார். இதுவே உலக சாதனையாகும்.

⊙ பைபிள் உலகெங்கிலும் 2123 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆப்பிரிக்காவில் மட்டும் 501 மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளதாம்.

உலகிலேயே முதன் முதலாக அச்சடிக்கபட்ட புத்தகமான பைபிள் இப்போது அதிக மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்ட புத்தகம் என்ற சாதனையும் படைத்துள்ளது.

⊙ கவாஸ்கர் எளிதில் அவுட் ஆகமாட்டார். செஞ்சுரி எடுப்பதில் உலக சாதனை படைத்தவர். இதுவரையில் இவர் எடுத்த செஞ்சுரிகள் 34.

புகழ்பெற்ற பிராட்மனை இவர் மிஞ்சி விட்டார். பிராட்மன் குறைந்த எண்ணிக்கை ஆட்டங்களில் செஞ்சுரிகளை எடுத்து உலக சாதனை புரிந்தவர். ஆனால் கவாஸ்கர் பிராட்மனின் சாதனையை முறியடிக்க அதிகமாக ஆட்டங்களில் ஆட வேண்டியிருந்தது.

கவாஸ்கர் எடுத்திருந்த ரன்களை ஆலன்பார்டர் மிஞ்சி விட்டார்.

ஆனால், கவாஸ்கர் எடுத்த செஞ்சுரிகளை இது வரையில் யாரும் மிஞ்சவில்லை.

⊙ ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டேவிட் உறக்ஸ்ஸி,மே 22 அன்று சிட்னி துறைமுகத்தில் 483 மெட்ரிக்டன் எடையுள்ள கப்பலை 25 மீட்டர் தொலைவிற்குத்தன் முதுகில் கட்டப்பட்ட கயிற்றாலேயே இழுத்து உலகிலேயே மிகவும் வலிமை வாய்ந்த மனிதர் என்ற சாதனையைப் படைத்தார்.

⊙ உறங்கேரியைச் சேர்ந்த ஆர்பாட்நிக் என்ற பயில்வான்,17டன் எடையுள்ள ஒரு விமானத்தை 10-மீட்டர் தூரம் பற்களால் இழுத்துக் காட்டினார்.

எல்லாம் கின்னஸில் இடம் பெறத்தான்.

⊙ அரிசி என்றாலே நமக்குச் சாப்பாடுதான் நினைவு வரும்.

ஆனால் நஞ்சப்பா ரெட்டி என்ற பெங்களூர் காரருக்குக் கொஞ்சம் வித்தியாசமான சிந்தனை வந்திருக்கிறது.

ஆமாம், அவர் அரிசியைக் கலை நோக்கோடு பார்த்திருக்கிறார். அதனால் ஒரே ஒரு அரிசியில் 4160 எழுத்துக்களை செதுக்கி உலக சாதனை புரிந்திருக்கிறார்.

இவர் வேலை இல்லா ஆளில்லை. பெங்களூரில் விமானத்துறை என்ஜினியர்.

⊙ ஆர்லெஸ் நகரில் உள்ளவர் ஜெனி கால்மெண்ட் என்ற பாட்டி. இவர் அதிக நாள் வாழ்ந்து வரும் பெண்மணி என்ற வகையில் உலக சாதனைப்பட்டியலில் இந்த பாட்டி இடம் பெற்றிருக்கிறார்.

சாதனைப் பட்டியலில் இடம்பெற்றதற்கான அத்தாட்சியுடன் மகிழ்ச்சியாக 1995-அக்டோபர் 17-ந் தேதி தனது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

⊙ மிகப் பெரிய தரைவிரிப்பு ஒன்று கின்னஸ் புத்தகத்தில் பதிவாகியுள்ளது.

1993-ஆம் ஆண்டுவரை உலகின் மிகப்பெரிய கம்பளித் தரை விரிப்பாகும்.

கிராவ்லி நகரைச் சேர்ந்த செயின்ட் காத்தரின் உறாஸ்பைஸ்தான் இந்த மிகப்பெரிய தரை விரிப்பை உருவாக்கியவர்.

இந்த விரிப்பின் ஒட்டு மொத்த அளவு 37 ஆயிரத்து 592 சதுர அடிகளாகும். இதன் எடை 1. 5 டன் இந்த விரிப்பை 1450 சிறிய துண்டுகளாகப் பிரித்து வளர்ந்துவரும் பல உலக நாடுகளுக்கு இவர் அனுப்பியிருக்கிறார்.

⊙ மேற்கு பிரான்ஸில் 26-இருக்கைகள் கொண்ட சைக்கிள் ஒன்றை உருவாக்கி இருக்கிறார்கள். சைக்கிளின் நீளம் 45 அடி எடை 300 கிலோ. இதில் 26 பேர் ஒன்றாக அமர்ந்து 4.4 மீட்டர் வரை பயணம் செய்து உலக சாதனை புரிந்துள்ளனர்.

⊙ ஓவியர் ஒருவர் புகைப்படக்காரராக மாறி செய்த சாதனை இது.

கெஸ்பார்டுஃபெலிக்ஸ்டூர்னாச்சர் என்பது அவர் பெயர்.

அலெக்ஸாண்டர் டூமாஸ். நடிகை ஸாரா பெர்னாடு போன்றோரை முதன் முதலில் புகைப்படம் எடுத்தவர். அது மட்டுமல்ல 1858 ஆம் ஆண்டு பறக்கும் பலூனில் இருந்தபடியே நிலப்பரப்பை முதலில் படம் எடுத்துச் சாதனை புரிந்தவர்.

விண்ணில் இருந்து நிலப்பரப்பை முதலில் படம்எடுத்த முதல் மனிதர் இவர்தான். பாரிஸ் நகரைப் பன்னிரண்டு கோணங்களில் படமெடுத்து முதல் முயற்சியிலேயே உலக சாதனை புரிந்தார்.

⊙ விஜியாங்-இப்பெண் கொரியாவைச் சேர்ந்தவர். சாதனைப் பெண்.

இவர் தனது 23-வயதில் பாராசூட் வீராங்கனையாகத் திகழ்கிறார்-சாதனைகளைப் புரிகிறார்.

அதில் ஒன்று'பங்கி ஜம்ப்' ஆகும். 400 மீட்டர் உயரத்திலிருந்து-விமானத்திலிருந்து பாராசூட்மூலம் குதித்து அதிலிருந்து 'பங்கிஜம்ப்' அடித்துக் காண்பித்தார்.

இது போன்ற வியத்தகு சாதனையைச் செய்து காண்பித்தவர். இவர் ஒருவரே.

இந்த உலக சாதனையைப் புரிந்த முதலாவது பெண்ணும் இவரே.

⊙ அமெரிக்காவைச் சேர்ந்த ரான்டிபார்னஸ் என்ற வீரப்பெண் 1989 ஆம் ஆண்டு இண்டோர், அவுட்டோர் போட்டிகளில் உலக சாதனை புரிந்த ஷாட்புட் வீரராவார். லாஸ் ஏஞ்சல்ஸில் 1989 ஜனவரி 20 -ஆம் தேதி அன்று 74 அடி 4½ அங்குல தூரத்திற்கு இவர் வீசிய குண்டு சென்று வீழ்ந்தது. இந்த சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை.

⊙ லெபனான் நாட்டைச் சேர்ந்தவர் பிலன். இவர் ஒரு கேக்கை தயாரித்து கின்னஸ் புத்தகத்தில் ஏறிவிட்டார்.

இவர் தயாரித்த கேக்கின் நீளம் 20 அடி.

1540-பவுண்டு மாவும் 30ஆயிரம் முட்டைகளும் இந்தக் கேக்கில் பயன்படுத்தப்பட்டதாம். 35 நாட்களில் தயாரிக்கப்பட்ட இந்தக் கேக், 10ஆயிரத்திற்கும் மேற்பட்டோரின் உதவியுடன் தயாரிக்கபட்டது.

⊙ பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த ஜென்னி லாங்கோ என்ற வீராங்கனை 1989ஆம் ஆண்டு உள் அரங்கு 10கி.மீ.போட்டி தூரத்தை 12 நிமிடம் 54.56 விநாடிகளில் கடந்து உலக சாதனை புரிந்தார். சைக்கிள் பந்தயப் போட்டிகளில் எட்டு முறை உலகச் சாம்பியன் பட்டத்தை வென்ற ஒரே பெண் இவர்தான். இந்தச் சாதனையை இன்னும் யாரும் முறியடிக்க வில்லை.

⊙ அமெரிக்காவைச் சேர்ந்தவர் பில்கார்கன். இவர் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறது. காரணம் இதுதான்: இவர் தோட்டத்தில் விளைந்த தர்பூசணி பழம் ஒன்று 118.84 கிலோ எடை கொண்டதாக இருந்ததால்தான் 1990 இல் இவ்வளவு எடை வரையில் உருவான 'வாட்டர்மெலான்'

என்பதால்தான் இவர் பெயர் உலக சாதனைப்புத்தகத்தில் இடம் பெற்றது.

⊙ மலைப்பாம்பு ஒன்று உலகை வியக்க வைத்திருக்கிறது. உலக சாதனையும் செய்திருக்கிறது.

184 கிலோ எடையுள்ள இந்தப் பாம்பு ஒரே நேரத்தில் 124 முட்டைகளை இட்டது.

பொதுவாக மலைப் பாம்புகள் எட்டு முதல் அறுபது முட்டைகள்தான் இடும் இந்த மாலைப் பாம்பை இந்தோனேசியாவின் சுமத்ரா தீவு விவசாயிகள் பிடித்து ஜாகர்தா மிருகக் காட்சியில் ஒப்படைத்தனர்.

இந்தப் பாம்புதான் மிருகக் காட்சி சாலையில் இத்தனை முட்டைகளைப் போட்டு உலக சாதனையை செய்துள்ளது.

⊙ அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த 75 வயது டிரைவர் ஒருவர் செய்த சாதனை இது.

இவர் தவறான பாதையில் காரோட்டிச் சென்றதற்காகவும், நான்குமுறை குடித்துவிட்டு நிறுத்தாமல் சென்றதற்காகவும் ஆறு விபத்துக்களுக்குக் காரணமாக இருந்ததற்காகவும் தண்டனை பெற்றார்.

இந்த அத்தனைக் குற்றங்களையும் இருபதே நிமிடங்களில் செய்தார் என்பதுதான் உலகமகா செய்தி.

1966-ஆம் ஆண்டு அக்டோபர் 15-ஆம் தேதி நடந்த இந்த நிகழ்ச்சி கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது.

⊙ யார்க்ஷயரைச் சேர்ந்த தம்பெலினா என்ற வேட்டை நாய் 6½ அங்குலம் நீளமும் 5½ அங்குலம் உயரமும் கொண்டது. இதன் வயது 14 மாதங்கள்

இந்தக் குட்டிநாயை அதன் உரிமையாளர் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு செல்வாராம்.

அவருடைய தோட்டத்தைப் படு சுறுசுறுப்பாய் இந்தச் சிறிய நாய் காவல் காக்குமாம். 1994 ஆம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் இந்தச் சிறிய நாய் இடம் பெற்றுள்ளது.

⊙ பிரான்ஸ் நாட்டில் பிறந்து அமெரிக்காவில் வாழ்பவர் 'பெனாயிட்லிகமெட்' இவர் ஒரு சாதனையாளர். டெக்ஸாஸில் உள்ள விமானக் கம்பெனி ஒன்றில் வேலை பார்க்கிறார்.

இவர் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தை நீந்தி கடந்து உலக சாதனை படைத்துள்ளார்.

உறயானிஸ் நகரின் கடற்கரையிலிருந்து தொடங்கி பிரான்ஸின் பிரஸட் நகரக் கடற்கரைவரை அட்லாண்டிக் கடலில் நீந்தி சாதனை புரிந்தார்.

இவர் கடந்த தூரம் 3400 மைல்களாகும். இதுவரை உலகில் இந்த சாதனை படைத்தது இல்லை.

⊙ மோட்டார் படகு மூலம் தனித்தே உலகைச் சுற்றி வந்த சிறப்பிற்குரிய மனிதர் 'ஸ்காட் கூப்பர்'. இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். பயணத்தின்போது நாள் ஒன்றுக்கு 166-மைல் வீதம் 170 நாள்களில் உலகைச்சுற்றி முடித்து தன் சாதனையைப்படைத்துள்ளார். இவர் சாதனையை இதுவரையாரும் முறியடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

⊙ உக்ரைன் நாட்டில் கடும் குளிரால் ஆறுகள், குளங்கள் யாவும் பனிக்கட்டியாக உறைந்து போய் விடுகின்றன. இதனால் நீர்வாழ் பறவைகள் எல்லாம் கடும் குளிரைத் தாங்க முடியாமல் இறந்து விடுகின்றன. இப்படிப்பட்ட பயங்கர குளிரிலும் உக்ரைனியரான ஒருவர். டனிபர் என்ற பனிக்கட்டிகளாக உறைந்த ஆற்றின் தண்ணீரில் மிகவும் துணிச்சலுடன் குளித்துக் காண்பித்து பிறரை வியக்க வைத்து சாதனை புரிந்துள்ளார்.

⊙ வாங்சூயி என்ற பெயரை உடைய சிறுமி ஒருத்தி தன் பிஞ்சுக்கால்களில் சக்கரங்களைக் கட்டிக் கொண்டு ஸ்கேட்டிங் செய்தவாறே 14.6 சென்டி மீட்டர் உயரமே உள்ள கம்பியின் அடியில் நுழைந்து முதுகு தட்டாமல் வெளியே வந்து காண்பித்தார்.

முந்தைய பழைய சாதனை 0.6 செ.மீ குறைவான உயரத்தில் நுழைந்து காண்பித்து வெற்றி பெற்றதால் இது உலக சாதனையாக ஏற்கப்பட்டுள்ளது.

இந்த ஆறுவயது சிறுமி சீனாவைச் சேர்ந்தவள்.

⊙ மராட்டிய மாநிலம் புனேயேச் சேர்ந்த ஸ்ரீதர் என்ற 53 வயதுக்காரர்தான் உலகிலேயே மிக நீளமான நகம் வளர்த்தவர்.

இவரது இடக்கை விரல்களில் உள்ள நகத்தின மொத்த நீளம் 4.30 மீட்டர். இதை இவர்1952 ஆம் ஆண்டில் இருந்து வளர்த்திருக்கிறார்.

இதைவிட வியப்பு என்னவென்றால் இந்த நகங்களை வைத்துக் கொண்டே புகைப் படங்கள் எடுத்துவருகிறார்.

தொடரும் நகம் வளர்ப்புச் செய்தி

டெல்லியைச் சேர்ந்த ரமேஷ்சர்மா என்பவர் 3.5 மீட்டர் நீளமுள்ள விரல் நகங்களுடன் இவரைநெருங்கிக் கொண்டிருக்கிறார்.

⊙ அபினவ் பின்ட்ரா என்பது இவனது பெயர் ஒன்பதாம் வகுப்பு மாணவனான அவன் செய்த சாதனை இது.

இவன் துப்பாக்கி சுடும் போட்டியில் 600க்கு 600 புள்ளிகள் எடுத்து துப்பாக்கி சுடுதலில் உலக சாதனை புரிந்துள்ளான்.

சண்டிகாரில் உள்ள பள்ளி ஒன்றில் படிக்கும் இந்த மாணவனின் வயது 13-தான். சப் ஜூனியர் பிரிவில் உள்ள இந்த மாணவன் சீனியர் பிரிவில் கலந்து கொண்டு சாதனை படைத்துள்ளது இவனிடம் இருக்கும் தன்னம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

இந்த அபினவ்வின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறப்போகிறது.

இதற்கு முந்தய உலக சாதனை 600க்கு 596 புள்ளிகளே.

⊙ உலகிலேயே மிகச்சிறிய நடமாடும் நாடக மேடை ஒன்றினைப் பிரிட்டனில் தயாரித்து இருக்கிறார்கள்.

இதைத் தயாரித்தவர்கள் ராஸ்வார்டு -லீனா தம்பதியினர்தான். இந்த நாடக மேடையை ஊர் ஊராகத்

தூக்கிச்சென்று இதனுள் இருந்து கொண்டே நாடகங்களை நடத்திக் காட்டி மக்களை மகிழ்விக்கிறார்கள்.

குறிப்பாக ஷேக்ஸ்பியரின் நாடகங்கள்தான் அதிகமாக இதில் நடிக்கப்படுகின்றன.

பல நாடுகளைச் சுற்றி வந்திருக்கும் இது உலக சாதனையார் பட்டியலில் இடம் பெற உள்ளது.

⊙ ஒரே கயிற்றில் ஒரே நேரத்தில் எத்தனைபேர் தொங்கலாம்?.. 12 பேர் தொங்கலாம் என்று பதில் சொல்கிறார்கள். ஸ்கைபிரேக்கர்ஸ் கிளப் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

ஹெல்சின்கி என்ற இடத்தில் வருடா வருடம் தண்ணீர்விழா ஒன்று நடக்கும். இந்த விழாவில் கயிற்றில் தலைகீழாகத் தொங்குவது போன்ற காட்சிகள் இடம் பெறும்.

ஸ்கை பிரேக்கர்ஸ் 12-பேர் தங்களை ஒரே கயிற்றில் காலைக் கட்டிக் கொண்டு தலைகீழாக தொங்க, தண்ணீர் விழாவைப் பார்க்க வந்தவர்களை அசத்தியிருக்கிறார்கள். இது ஓர் உலக சாதனையாகும்.

⊙ பெங்களூரில் வசிக்கும் தகோக மற்றும் பத்மா பாலாஜி இருவரும் இதற்கு முன்பே சில சாதனைகளைச் செய்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறார்கள்.

தற்போது மீண்டும் ஒரு சாதனை செய்து கின்னஸை நோக்கிச் செல்கின்றனர். ஆமாம்.

சாதாரணமாக நான்கு அடிகள் மட்டுமே வளரக்கூடிய தாளியா (DAHILLIA) என்றச் செடியை த் தற்போது 13 அடி 6 அங்குலம் உயரமுள்ளதாக வளரச் செய்து சாதனை செய்துள்ளனர்.

⊙ கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு ஒரு மாதத்திற்கு முன்பே விற்பனையைச் சூடு பிடிக்கச் செய்ய சிங்கப்பூரில் உள்ள 'டாங்கிலன் மால்' என்ற விற்பனைக்கூடம். இப்போது இருந்தே விற்பனையைத் தொடங்கி விட்டது, என்று அறிவிப்பதற்காகத் தங்கள் கடை வாசலில் 51 அடி உயரத்திற்கு 'சாண்டா கிளாஸ்' உருவமொன்றை அமைத்திருந்தது.

இத்தனை உயர கிறிஸ்மஸ் தாத்தா உருவத்தை உலகில் யாருமே உருவாக்க வில்லையாம்.

வாடிக்கையாளர்களை கவர்வதோடு கின்னஸ் உலக சாதனை பட்டியலிலும் தங்களுடைய பொம்மை இடம்பெற வேண்டும் என்பதற்காகவும் முயன்றிருக்கிறது.

⊙ இப்படியும் ஒரு உலக சாதனை. சென்னையைச் சேர்ந்தவர் வடிவேலு கருணாகரன். இவர் 1990 ஆம் ஆண்டு 'ஸ்கிப்பிங்' செய்து கொண்டே 16-கிலோ மீட்டார் தூரத்தை 58 நிமிடங்களில் கடந்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்தார்.

⊙ பதினெட்டு சைக்கிள்கள் ஐந்து இரும்பு கூடைகள், ஏழு டெலிவிஷன் பெட்டிகள். இரண்டு இரும்புக் கட்டில், மூன்று இரும்பு பீரோ இவை எல்லாம் ஆறு ஆண்டுகளில் ஒரு மனிதர் 'சாப்பிட்டு' முடித்த உணவுப் பொருட்கள்.

1959 முதல் 1965 வரை பிரான்சு நாட்டில் பொதுமக்கள் முன்னால் இவர் சாப்பிட்ட பொருட்கள் இவை. இரும்பு, மரம், பாட்டில் என எதையும் சாப்பிட்டு ஜீரணிக்கிறதாம் இவரின் உடம்பு-வயிறு.

இவருடைய குடலைச் சோதித்த மருத்துவர்கள் ஒரு நாளைக்கு 900 கிராம் இது போன்ற பொருட்களைச் சாப்பிட்டால், இவருக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை' என சான்றிதழ் வழங்கி உள்ளனர்.

தற்போது இவர் உயிரோடு இல்லாவிட்டாலும் இவரின் சாதனையைக் கின்னஸ் புத்தகம் வெளியிட்டு மக்களுக்குத் தெரிவித்து இருக்கிறது.

⊙ பிராயர் மேன் என்பவர் புகழ் பெற்ற கலைக் கூத்தாடி. அமெரிக்காவின் வாடிவில்லி நகரைச் சேர்ந்த இவர், 1930 ஆம் ஆண்டு ஓர் உலக சாதனையைச் செய்தார்.

ஒரு டென்னிஸ் மட்டையின் வளையத்திற்குள் தன் முழு உடலையும் நுழைத்து வெளிவந்தார்.

இச் சாதனை இன்றளவும் ஓர் உலக சாதனையாகக் கருதப்படுகிறது.

⊙ 19 வயது பல்கலைக் கழக மாணவனான மாத்யூ மாக்கோரி என்பவனின் கால்களுக்கு ஏற்ற காலுறைகள் இதுவரை தயாரிக்கப்படவில்லை.

இவன் இரண்டு சாக்ஸ்களை இணைத்து ஒன்றாக மாற்றி தன் கால்களில் அணிந்து கொள்கிறான்.

இவன் கால்களில் வலக்கால் 16.5 அங்குல நீளமும், இடக் கால் 17.5 அங்குல நீளமும் கொண்டவை.

அமெரிக்க அளவு முறைப்படி இவன் 23-சைஸ் காலணியை அணிகிறான்.இது பிரிட்டன் அளவுக்கு 22.5 ஆகும்.

மிக நீண்ட கால்களைக் கொண்ட ஆசாமி என்று இவன் பெயரை விரைவில் கின்னஸ் புத்தகத்தில் வெளியிட இருக்கிறது.

•

⊙ ஒரே இடத்தில் ஐம்பது மணிநேரம் குதித்து உலக சாதனைப் புரிந்து கின்னஸில் இடம் பெறவிருக்கும் திருச்சியைச் சேர்ந்த மரியதாஸைப் பேட்டி கண்டார்கள். ஐம்பது மணி நேரம் என்பது ஒர் உலக சாதனை.

இதை செய்து முடித்ததும் உங்களுக்கு எப்படி இருந்தது? என்றார்கள். கொஞ்சம் லைட்டா உடம்பு வலிச்சது" என்று சிரித்தார் அந்த வீர இளைஞர்.

⊙ சிறுமியின் பெயர் ட்ருணா நிஷாத். இவளுக்கு வயது நாலரைதான். ஆனால், நீச்சலில் உலக சாதனை படைத்திருக்கிறாள்.

நிஷா 6.050 மீட்டர் தூரத்தை 6.39 மணியில் நீந்தி சாதனை படைத்துள்ளாள். நிஷாவுக்கு முன் ஐந்தரை வயதுச் சிறுவன் பாலாஜி 5,600 மீட்டர் நீந்தியது உலக சாதனையாக இருந்ததாம்.

⊙ ஆறு நிமிடத்தில் 800 சிகரெட்டுக்களை ஒரே நேரத்தில் ஒருவர் புகைத்திருக்கிறார். புச்சாரெஸ்ட் நகருக்குச் சென்ற க்ளச் நாட்டைச் சேர்ந்த ஸ்டீபன் சிகமான்ட் என்ற வாலிபர்தான் அவர்.

வட்டவடிவில் 800 சிகரெட்டுக்களை ஒரே நேரத்தில் பற்ற வைத்து அதன் முனைகள் அனைத்தும் ஒரே குழாயில் வந்து சேரும்படி அமைத்து இழுத்துக் குடித்துத் தள்ளியிருக்கிறார் ஸ்டீபன்.

முந்தைய கின்னஸ் சாதனையை முறியடிப்பதற்காக இப்படிச் செய்ததாக் கூறும் இவர் இதற்கு முன்பு வேக வைத்த 29 முட்டைகளை நான்கே நிமிடத்தில் தின்று சாதனை படைத்திருக்கிறார்.

இதைத்தவிர 135 அடி உயரத்திலிருந்து ஏரிக்குள் குதித்தும் சாதனை புரிந்திருக்கிறார்.

ஆனால், இப்படிப்பட்ட உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அபாயகரமான சாதனைகளை இப்போது கின்னஸ் ஏற்றுக் கொள்வது இல்லை என்று அறிவித்திருக்கிறது.

⊙ மிஸிஸிப்பி நகரில் ஆண்டு தோறும் புதுமையான போட்டி ஒன்றை நடத்துகிறார்கள். எச்சில் துப்பும் போட்டிதான் அது.

நின்ற இடத்திலிருந்தே ஒருவர் எவ்வளவு தூரத்திற்கு எச்சிலைத் துப்புகிறாரோ அவருக்கே முதல் பரிசு.

இதுவரை இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்கள் டான் ஸிண்டர் என்பவர் 25 அடி 10 அங்குலம் தூரத்திற்கு எச்சிலைத் துப்பி சாதனை படைத்திருக்கிறாராம்

இதற்காக இவருக்குக் கொடுக்கப்பட்ட முதல் பரிசு என்ன?

தங்கமுலாம் பூசப்பட்ட எச்சில் துப்பும் கிண்ணம். இது ஓர் உலக சாதனை.

⊙ 1994 ஆம் ஆண்டு சுவீடனில் நடந்த அகில உலக பளு தூக்கும் போட்டியில் 256 கிலோ எடை தூக்கி சாதனைபடைத்து போட்டியில் முதலிடம் பெற்றிருக்கிறார் பாஸ்கரன்.

இதற்கு முன் 1992 இல் பிரிட்டனில் நடந்த 'டெட் லிஃப்ட்' உலகப் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பெற்றார்.

அதே ஆண்டு ஆசிய நாடுகளுக்கு இடையே நடந்த போட்டியில் முதலிடத்தை வென்றார்.

உள் நாட்டில் 1990 இல் சேலத்தில் நடந்த போட்டியில் 'இரும்பு மனிதர்' என்ற பட்டமும், 1992 இல் துர்காபூரில் மீண்டும் இதேப் பட்டத்தை பெற்றார். இவர் கேரளத்தைச் சேர்ந்தவர்.

⊙ 1976- ஆம் ஆண்டில் மட்டும் ஐம்பதுக்கும் மேற்பட்ட முழு நாவல்களை எழுதிப் பிரசுரித்து கின்னஸ் சாதனையாளர் புத்தகத்தில் இடம் பெற்றவர்.

பிரிட்டனைச் சேர்ந்த 'உர்சுலா ப்ளூம்' என்ற பெண் எழுத்தாளர்.

1903-இல் இவரது முதல் கதை வெளிவந்தபோது இவருக்கு வயது எட்டுதான். 91-வயது வரை வாழ்ந்த இந்த பெண் நாவலாசிரியை எழுதிய எல்லாம் காதல் கதைகள்தான்.

⊙ எட்டாம் வகுப்பு மாணவனான எம்.கிரி தண்ணீரில் தொடர்ந்து 4 மணி 15 நிமிடங்கள் மிதந்து சாதனை படைத்துள்ளான். சென்னை முட்டுக்காடு படகுத்துறையில் இச்சிறுவன் செய்த சாதனை கின்னஸில் இடம்பிடிக்குமாம். 12-வயதே ஆகும் கிரியின் இந்த சாதனை நமது இளைஞர்களின் சிறப்பான எதிர்காலத்துக்கு ஒர் எடுத்துக் காட்டாகும்.

❖❖❖

⊙ உலகில் ஜப்பான், சூரியசக்திகார் சாதனையில் தான் எடுத்துக் கொண்ட சபதத்தை வென்று வரலாறு படைத் திருக்கிறது.

ஜப்பான் ஹோண்டாகார் கம்பெனியின் தயாரிப்பான இந்த கனவுக்கன்னி என்ற சூரிய சக்திக்காரே அந்த சாதனையைப் படைத்திருக்கிறது.

தொடர்ச்சியாக 3,000 ஆயிரம் கி.மீட்டர்கள் 35. 30 மணி நேரத்தில் உலகை வலம் வந்து காண்பித்ததே அந்த சாதனை ஆகும். இது ஓர் உலக ரிகார்டு ஆகும்.

⊙ 12-வயதுப் பையனின் எடை 112 கிலோ. நம்புங்கள், உண்மைதான். மகாராஷ்டிராவில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஷிஷங்காமரோட்டி கச்சார்டே என்ற இச்சிறுவன், ஒரு வயதாகும் போது 10 கிலோவும், 9 வயது ஆகும்போது 87 கிலோவும் எடை இருந்து இருக்கிறான்.

டில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்தில் இவன் சிகிச்சை செய்து வந்து இருக்கிறான். உலகிலேயே மிக அதிக எடையுள்ள சிறுவன் என்ற சாதனைக்காக இவன் பெயர் கின்னஸ் புத்தகத்திற்குச் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறான்.

⊙ தைவானின் தெற்கு நகரமான கோஸியங்கைச் சேர்ந்த வாங்மியங்கும் சென்சியாவும் தங்கள் திருமணத்தை முடித்துக் கொண்டு நெருப்புக் கோழிகள் மீது அமர்ந்து திருமண ஊர்வலம் வந்தார்கள்.

மணமக்கள் இருவருமே நெருப்புக் கோழிப் பந்தய வீரர்கள். இதுவரை 42 பந்தயங்களில் வென்று கின்னஸ் புத்தகத்திலும் இடம் பிடித்துள்ளனர். இதுவரை எவருமே வென்றது கிடையாது. இந்த அதிசயத் திருமணத்தைத் தைவான் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

⊙ உலகின் மிக நீளமான சாண்ட்விச் ஒன்றைச் செய்து இருக்கிறார்கள்.

1400 கிலோ இறைச்சியும் காய்கறிகளும் கலந்த கலவையை 600கிலோ எடையுள்ள ரொட்டித் துண்டுகளுக்குள் அடைத்து இந்த நீளமான சாண்ட்விச் உருவாக்கினார்கள்.

சாண்ட்விச்சின் நீளம் 2000 அடி. நடந்த இடம்- கோஸியங் (தைவான்) நூற்றுக்கணக்கான மாணவர்கள் இந்த சாண்ட்விச் தயாரிப்பில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

⊙ தன் வாழ்நாளில் 1500க்கும் மேற்பட்ட கோல்களைப் போட்ட விளையாட்டு வீரர். ஃபெரன்ஸ் புஸ்கஸ் என்பவரே. உறங்கேரி நாட்டு தேசீய அணியில் 17 வயதிலேயே இடம் பெற்ற இவர், 84-சர்வதேச கால் பந்தாட்டப் போட்டிகளில் 84 கோல்கள் போட்டுச் சாதனை புரிந்துள்ளார். 84 கோல்களும் இடக்காலால் போட்ட கோல்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

⊙ 1986- ஆகஸ்ட் 31-ல் நடைபெற்ற 'ஆல்ட்டர் நேட்டிவ்' ஒலிம்பிக்கில் நான்கே நிமிடங்களில் 28 கரப்பான் பூச்சிகளைத் தின்று உலக சாதனையை செய்திருக்கிறார். இவர் பெயர் கென் எட்வர்ட்ஸ் என்பதாகும்.

⊙ பன்னிரண்டு மணிநேரத்தில் ஒருவர் கையெழுத்துப் போட்டே சாதனை புரிந்திருக்கிறார்.

ஜார்ஜ் தாமஸ் என்பவர் நல நிதிக்காக 9000 கார்டுகளில் கையெழுத்துப்போட்டு வழங்கினார்.

உறம்பர்சைட் பகுதியில் உள்ள உறல் என்னும் இடத்தைச் சேர்ந்த இவர் 1997 ஜூன் 25-இல் இந்தச் சாதனையை செய்தார்.

⊙ பிரிட்டன்-பாரிஉதீன் என்ற வீரர் 1976-ஆம் ஆண்டு மணிக்கு 217 கி.மீட்டர் வேகத்தில் மோட்டார் பைக் ஓட்டி உலக சாதனை புரிந்துள்ளார்.

அதாவது ஒரு நிமிடத்திற்கு 3½ கிலோ மீட்டர் வீதம் சென்று போட்டித் தூரத்தைக் கடந்து சாதனை புரிந்துள்ளார்.

⊙ 24 மணி நேரத்தில் 4444.8 கி.மீ தூரத்தை 941cc நான்கு சிலிண்டர் பைக் மூலம் வெற்றிகரமாகக் கடந்தார்கள். ஜூன் கிளாடிசேமரின் என்பவரும் அவரது நண்பர் கிறிஸ்டியன் லியோன் என்பவரும். பிரான்ஸ் நாட்டில் 1976 ஆகஸ்ட் 14,15 ஆகிய தேதிகளில் இந்த உலக சாதனை நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறார்கள்.

⊙ கத்தி, பிளேடு, சிறுரம்பம் போன்றவற்றைப் பிஸ்கட்டுகளைச் சாப்பிடுவதுபோல் சாப்பிடும் வித்தை வீரர் கிரேகர் என்பர். புதிய சாதனை ஒன்றைப்புரிவதற்காக ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் படுத்துக்கொண்டார்.

பிறகு உடைந்த பாட்டில்கள், கண்ணாடித் துண்டுகள், கோப்பை உடைசல்கள் போன்ற அசைந்தால் கூட ரத்தக்காயம் ஏற்படக்கூடிய பொருள்களைத் தன்மீது கொட்டச் சொன்னார். பிறகு, இன்னொரு கண்ணாடி மூடியால் அப்படியே தன்னை மூடி 'சீல்' செய்யச் சொன்னார்.

இப்படியே ஆபத்தான கண்ணாடித் துண்டுகள் போன்ற பொருள்களுடன் ஒரு மணி நேரம் படுத்திருந்து சாதனை செய்து காட்டினார் இந்த மனிதர். எல்லாம் கின்னஸில் இடம் பெறத்தான்.

⊙ ஜானி வெய்ஸ் முல்லர் என்பவர் நூறு மீட்டர் தூரத்தை ஒரு நிமிட நேரத்துக்கும் குறைவான நேரத்தில் நீந்திக் கடந்தவர் இந்த வீரர்தான்.

ஒலிம்பிக்கில் இந்த சாதனையைச் செய்த இவர். பின் டார்ஜான், தி ஏப் மேன் உட்பட 150 படங்களில் நடித்து, உலகப் புகழ்பெற்ற நடிகராகவும் உயர்வு பெற்றார்.

⊙ கோலாலம்பூரில் 370 அடி நீளம் உள்ள பெரிய ராட்சத கேக் ஒன்றைத் தயாரித்து மார்க்கெட்டிற்கு கொண்டு போய் விற்றார்கள்.

இந்த கேக் தயாரிக்க 4000 முட்டைகள், 150 கிலோ சர்க்கரை, 100 கிலோ மாவு, 33 கிலோ சோளமாவு, 350 கிலோ கிரீம், 800 அன்னாசி பழங்கள் பயன்படுத்தப்பட்டனவாம்.

இது ஒரு சாதனையாக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுகிறது. இந்தக் கேக்கின் விற்பனை மலேசியக் குழந்தைகள் உதவி சங்கத்திற்கு அளிப்பதற்காகச் செய்யப்பட்ட சாதனையாகும்.

⊙ சென்னை கடற்கரை-அண்ணா நீச்சல் குளத்தில் சண்முகம் என்பவர் தண்ணீரில் கை, காலை ஆட்டாமல் மல்லாந்து 5 மணிநேரம் மிதந்து உலக சாதனை புரிந்தார்.

இவர் ஏற்கனவே 81 மணிநேரம் தொடர்ந்து தண்ணீரில் நீந்தி உலக சாதனை செய்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்த தமிழ்நாட்டுக்காரர் என்பது குறிப்பிடத்தக்கது.

⊙ ஜெர்மன் மைன்ஸ் நகரில் உள்ள மைக்ரோ தொழில் நுட்பக் கழகம் மூட்டைப் பூச்சி அளவில்

மிகமிக சிறியதாக ஹெலிகாப்டர் விமானத்தை உருவாக்கியிருக்கிறது.

இதன் எடை என்ன தெரியுமா? ஒரு கிராமில் பாதியைவிடக் குறைவு. உயரம் 8 மி.மீ. ஓர் அங்குலத்தில் மூன்றில் ஒரு பங்கு.

இதில் உள்ள மிக நுண்ணிய மோட்டாரை இயக்கினால், ஹெலிகாப்டரின் மேற்பகுதியில் உள்ள இரு பிளேடுகளும் நிமிடத்திற்கு ஒரு லட்சம் தடவை சுழலும். இந்த மோட்டாரின் விட்டம் 1.9 மி.மீ.

1996-இல் வெள்ளோட்டம் விடப்பட்டது. 13 செ. மீ உயரம் பறந்து சென்று மெதுவாகக் கீழே இறங்கியது.

இதைத் தயாரிக்க ஆன செலவு கொஞ்சம் அதிகம்தான். ஆமாம் 24 லட்சம்தான்.

இந்த ஹெலிகாப்டர் கின்னஸ் சாதனை புத்தகத்திலும் முகம் காட்ட உள்ளது.

⊙ 1994 ஆம் ஆண்டு ஓஹையோவில் சின்சினாட்டியில் 48,000 பேர்கள் ஒரே இடத்தில் நடனம் ஆடியது உலக சாதனை.

இந்த சாதனையை முறியடிப்பது போல் 1997 ஆம் ஆண்டு 65,000 பேர்கள் ஸ்ரோவாக் சிட்டி (கோஸிஸ்)யின் பிரதானச் சாலையில் தொடர்ச்சியாகப் பாடப்பட்ட இரண்டு இசைப்பாடல்களுக்கு 5 நிமிடங்கள் மொத்தமாக ஆடி அமர்க்களப்படுத்தினார்கள். இது புதிய சாதனை.

⊙ பிளாக்பூலைச் சேர்ந்தவர் நார்மன் ஜான்சன். இவர் வெள்ளரிக்காயை வெட்டுவதில் மிகச் சூரர். இவர் 1983 ஆம் ஆண்டு 12 அங்குல நீளமும் 1½ அங்குல விட்டமும் கொண்ட வெள்ளரிக்காயை 264 துண்டுகளாக வெட்டி தன் சாதனையை நிகழ்த்தினார். இந்த பிரிட்டன் சமையற்காரர்தான் கின்னஸ் புத்தகத்தில் இருக்கிறார். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக யாரும் இந்த சாதனையை முறியடிக்கவில்லை.

⊙ கென்யாவைச் சேர்ந்தவர் டேசியல் கோஜென் என்பவர். இந்த 20 வயதுக்காரர் சமீபத்தில் 3000 மீட்டர் ஓட்டப்பந்தய தூரத்தை 7 நிமிடம் 25. 16 விநாடிகளில் கடந்தார். இது உலக சாதனை.

இதற்கு முன்பு இதே ஜூரிச் நகரில் இவர் நாட்டைச் சேர்ந்த மோசஸ் கிட்டானு என்பவர் கடந்த (1995 ஆம் ஆண்டு) 7 நிமிடம் 59.19 விநாடிகளில் இருந்த சாதனை இதன் மூலம் முறியடிக்கப்பட்டது.

⦿ பெண்களுக்கான ஒரு மைல் தூர ஓட்டப் பந்தயத்தில் இப்போதைய உலக சாதனை நேரம் 4 நிமிடம் 12.56 விநாடிகள்.

ரஷ்யாவைச் சேர்ந்த ஸ்வீட்லானா மாஸ்டெர் கோங் என்ற வீராங்கனை இந்த சாதனையைச் சாதித்துள்ளார்.

1996 இல் ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்ற சர்வதேச தடகளப் போட்டியில் இந்தப் புதிய சாதனை நிகழ்த்தப்பட்டது.

⦿ உலகில் முதன் முதலாகத் தனித்தே ஒரு பெண்மணி வடதுருவத்தை அடைந்திருக்கிறார். பூமியின் தென் துருவத்தில் இருந்து புறப்பட்டு வடதுருவத்தை வெற்றிகரமாக அடைந்திருக்கிறார்.

மோரீஸ் நாட்டைச் சேர்ந்த இப் பெண்மணியின்

துணிச்சலைப் பாராட்டி உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்திருக்கிறது.

இவர் பெயர், லீப் ஆர்னிசன். இச் சாதனைக்கு இவர் பயன்படுத்தியது ஸ்லெட்ஜ் வாகனம்.

⊙ இரண்டு பெண்களின் உலக சாதனை இது. சீனாவின் தென்பகுதியில் உள்ளது மான்யூ நகர். இந்நகரில் இரண்டு சீனப் பெண்கள் துணிச்சலுடன், சீனர்களின் அதிர்ஷ்ட எண் எட்டு என்பதால் ஹாங்காங், ஷாங்காய், பீஜிங், க்வாங்யூ நகரங்களிலிருந்து விசேஷ அழைப்பாளர்களாக எட்டுபேர்களை அழைத்து வந்து, அவர்களின் முன்னிலையில் 666 மிகவும் வீரிய விஷம் கொண்ட 888பாம்புகளுடன் ஒரு கண்ணாடிக் கூண்டிற்குள் 288 மணி நேரம் உள்ளே இருந்து சாதனைச் செய்து இருக்கிறார்கள். இது கின்னஸ் சாதனை.

⊙ ஜெர்மனியில் கொலோழ்ன்ஞ் நகரில் கைத்தொழில், கைவினைப் பொருட்கள் கண்காட்சி ஒன்று நடந்தது.

அப்போது அக்கண்காட்சியில் கலந்து கொண்ட அனைவரையும் ஒரு சோபாசெட் தன்பக்கம் இழுத்துக் கொண்டது.

இது உலகிலேயே மிகப்பெரிய சோபா என்ற பெயரைத் தட்டிச் சென்று கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

இதன் உயரம் 5-மீட்டர் எடை ஒரு டன். சோபாவின் மேலே ஏறி உட்கார வசதியாகச் சிறிய ஏணிப்படியும் உண்டு.

கிருஷ்ணோகிராவ் என்பவர் பெங்களூரைச் சேர்ந்தவர். இவரின் கின்னஸ் சாதனை என்ன தெரியுமா?

இவர் ஒரே கயிற்றில் 3,000 பட்டங்களைப் பறக்கவிட்டு உலக சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் முந்தைய சாதனையையும் முறியடித்திருக்கிறார்.

இதற்கு முந்தைய சாதனை ஒரே கயிற்றில் 2,500 பட்டங்களைப் பறக்கவிட்டது சாதனையாக இருந்தது.

⊙ 61-வயது அமெரிக்கர் ஒருவர் உலக சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

1.68 மீட்டர் நீளம் உள்ள மிகச் சிறிய படகில் வட அட்லாண்டிக் கடலை கடந்துள்ளார்.

இவருடைய பெயர் உறியூகோ விக்லென். 106 நாட்கள் பயணம் செய்து அட்லாண்டிக் கடலைக் கடந்துள்ளார்.

படகினுடைய வேகம், தத்தளிப்பு போன்றவற்றால் இவருடைய உடல் 15.4 கிலோ குறைந்து விட்டதாம்.

⊙ பிரேம் நசீருடன் இரண்டு நடிகைகள் மட்டும்தான் உறீரோயினாக அதிகப் படங்களில் நடித்துள்ளார்கள். ஒருவர் ஷீலா. அவர் 110 படங்களில் நடித்துள்ளார். மற்றொருவர் ஜெயபாரதி. இவர் 70 படங்களில் பிரேம்நசீருடன் நடித்துள்ளார். இது ஓர் உலக சாதனை.

⊙ மிக மெல்லிதான மனித தலை முடியிலேயே ஓவியம் வரைவது, முடியைப் பல பாகங்களாகப் பிரிப்பது போன்ற சாதனைகளை இதுவரை உலகில் பலநாடுகளைச் சேர்ந்தவர்கள் செய்துள்ளனர்.

ஆனால் ரஷ்யாவில் உக்ரைனைச் சேர்ந்த மைக்கேல் மகல்யுக் என்பவர் எல்லோரையும் கீழே தள்ளி விட்டு முன் நிற்கிறார்.

தலைமுடி ஒன்றைக் குடைந்து குகைப் பாதையை உருவாக்கியுள்ளார். பின்னர் அந்தக் குகைக்குள் செல்லக் கூடிய, உலகிலேயே மிகச் சிறிய ரயில் ஒன்றையும் உருவாக்கி உள்ளார். அந்த ரயிலில் 15 பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.

மைக்கேலின் இந்த இரண்டு சாதனைகளையும் மைக்ரே ஸ்கோப் மூலம்தான் பார்க்க முடியும்.

⊙ ஜகதீஷ் ராஜ் என்ற நடிகர் 44 இந்திப் படங்களில், இன்ஸ்பெக்டர் வேடத்திலேயே நடித்து உலக சாதனை புரிந்துள்ளார். நாற்பது ஆண்டுகளாக நடித்து வரும் ஒரே நடிக இன்ஸ்பெக்டர் இவர்தான்.

⊙ உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர் ராஜேந்திர பிரசாத் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறார். எதனால்?

இந்தியா, நேபாளம், சீனா, திபெத் ஆகிய நாடுகளுக்கு இடையே 1,70,000 கி.மீட்டர் தூரம் ஓடி சாதனை புரிந்திருக்கிறார். இந்த சாதனையை 5

ஆண்டுகள் 3 மாதத்தில் முடித்திருக்கிறார். இவர் ஓடிச் சென்றே கின்னஸில் இடம் பெற்றவர்.

⊙ 1997 ஆம் ஆண்டு சிகாகோ, மாரத்தானில் 2-மணி 7 நிமிடம் 10 விநாடிகளில் காலித் கான் நௌச்சி என்ற வீராங்கனை வென்றார். நான்காவது அதிவேகமான ஓட்டமாகவும் இது சாதனை புரிந்து விட்டது. இந்த மொரோக்கோ வீராங்கனை முதன் முதலாக இந்த ஆண்டுதான் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

⊙ கொலம்பியாவைச் சேர்ந்த ஜோஸ் ஆர்டனேஸ், வானொலியில் 36 மணிநேரம் தொடரந்து பேசி, 4000 ஜோக்குகளைச் சொல்லி உலக சாதனை புரிந்துள்ளார்.

⊙ உலகில் உயரமான பெரிய புத்தர் சிலை ஒன்று டோக்கியோவிலுள்ள உஷிரு என்ற கிராமத்தில் இருக்கிறது.

இந்தச் சிலையின் உயரம் 120 மீட்டர். இதில் சிலையின் உயரம் மட்டும் 100 அடி. பீடம் 20 மீட்டர். சிலையின் எடை 4,000 டன்.

புத்தரின் சிலைக்குள் நுழைய 1000 யென் கட்டணம் உண்டு. 85 மீட்டர் வரை செல்ல எலிவேட்டர் வசதி உள்ளது. உள்ளே நான்கு தளங்களும், அறைகளும் உள்ளன. தியானம் செய்ய ஓர் அறை. இன்னோர் அறையில் மூவாயிரம் சிறிய புத்தர் சிலைகள் உள்ளன.

சிலைக்குள் 85 மீட்டர் உயரம் வரை சென்றதும் புத்தரின் இதயத்தில் மூன்று சிறுசிறு ஜன்னல்கள் உள்ளன. அந்த ஜன்னல்கள் வழியே உலகத்தைப் பார்க்கலாம்.

புத்தரின் இடக்கை மட்டும் 18 மீட்டர் நீளம். புத்தரின்முகம் 26 மீட்டர் நீளம். காது 20 மீட்டர். கண்கள் ஒவ்வொன்றும் தலா 2..5மீ. நீளமுள்ளவை. வாய் 4 மீட்டர்.

முதலில் எஃகு இரும்பினால் கம்பிகள் அமைக்கப்பட்டன. பிறகு கிரேன் மூலம் செம்புத் தகடுகள் ஆங்காங்கே பொருத்தப்பட்டன. இப்படி இணைக்கப்பட்டுள்ள இணைப்புகளை வெளியில் இருந்தே காணலாம்.

சிலையின் அடிப்பீடத்திலுள்ள தாமரை மலர்களில் புத்தரின் பக்தர்களால் தங்கம் பூசப்பட்டு வருகிறது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பார்வையாளர்களின் கவனத்தை இந்த 1993-ஆம் ஆண்டு கின்னஸ் சிலை மிகவும் கவர்ந்து வருகிறது.

இந்தச் சிலையை அண்ணாந்து பார்த்தால் கழுத்துக் கொஞ்சம் வலிக்கத்தான் செய்யும்.

⊙ 16 ஆண்டுகளாக இந்தியா அண்டார்டிகா ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. இதுவும் ஓர் உலக சாதனையே.

⊙ கார் பந்தயத்தின்போது கலந்து கொண்ட டாமன்உறில் அதிகபட்ச வேகமாக மணிக்கு 220 மைல்வேகத்தில் காரை ஓட்டி சாதனை படைத்திருக்கிறார்.

ஸ்டேன் பாரட் என்னும் அமெரிக்கருடன் ஒப்பிடும்போது இவரது வேகம் குறைவுதான். ஏனெனில் 1970 ஆண்டு இவர் ஓட்டிச் சென்ற ராக்கெட்பவர்

மூன்று சக்கர காரின் வேகம் மணிக்கு 739.7 மைல் ஆகும். அதாவது ஒலியின் வேகத்தைவிட மிஞ்சுகின்ற வேகம்.

⊙ உலகிலேயே மிகப்பெரிய பாத்திரம் என கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள ஜெய்ப்பூர் வெள்ளிப் பாத்திரம்தான்.

1902- இந்தியாவை ஆங்கிலேயர் ஆண்டபோது இங்கிலாந்தில் ஏழாம் எட்வர்ட் மன்னரின் முடிசூட்டு விழா நடைபெற இருந்தது.

அவ்விழாவைக் காண, இந்திய சுதேசி மன்னர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். ஜெய்ப்பூரைக் கண்ட மாதவ்சிங் எட்வர்ட் மன்னருக்கு இந்தியா விலிருந்து புனித கங்கை நீர் கொண்டு செல்வதற்காக இரண்டு வெள்ளிப் பாத்திரங்கள் தயாரித்தார்.

1480 இல் ராஜ்சாஹி எனப்படும் மிகப் பெரிய வெள்ளி நாணயங்களை உருக்கி இரண்டு ஆண்டுகள் இப்பாத்திரங்கள் கலை நுணுக்கத்துடன் தயாரிக்கப்பட்டன.

இதில் புனித கங்கை நீர் நிரப்பியவுடன் 1000 கிலோ எடை இருந்ததாம். கங்கை நீருடன் மன்னர் லண்டனுக்கு கப்பலில் புறப்பட்டார். ஆனால் எட்வர்ட் மன்னருக்கு காய்ச்சல் உண்டானதால் குறிப்பிட்ட நாளில் விழா நடைபெறாமல் ஒத்தி வைக்கப்பட்டதாம். மாதவ்சிங் உலகின்மிகப்பெரிய வெள்ளிப் பாத்திரங்களுடன் ஜெய்ப்பூர் திரும்பினார். 1922 இல் மாதவ் சிங்கின் மறைவிற்குப்பின் இப்பாத்திரம் சுத்தப்படுத்தும்போதுதான் இதன் மதிப்பும் வரலாறும் வெளிவந்தது. இப்போது மான்சிங் அரண்மனை மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

⊙ உலகின் மிகப் பெரிய செயற்கை நீருற்று சிங்கப்பூர் சன்டீ சிட்டியில் அமைக்கபட்டுள்ளது.

இந்த நீருற்றின் விட்டம் 21-மீட்டர். 18,117 சதுர அடிப்பரப்பில் நீரைப் பீச்சியடிக்கும் ஆற்றல் கொண்டது. 138 மீட்டர் உயரமான நான்கு செப்புத் தூண்களில் அமைக்கப்பட்டு இருக்கும் உலகின் பெரிய நீருற்று இது. இது கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

⊙ அமெரிக்காவைச்சேர்ந்த பிராங்க் கேபாசிக்கு வயது 67. இவருக்கு விஸ்கான்சின் மாநில லாட்டரியில் 1998 இல் 'ஜாக்பாட்' பரிசு கிடைத்திருக்கிறது.

இவர் வாங்கிய லாட்டரி சீட்டுக்குக் கிடைத்த பரிசு 780 கோடி. உலக வரலாற்றில் ஜாக்பாட்டாக அதிகத் தொகை வென்றவர் இவரே.

⊙ யாசுவோ காட்டோ, ஜப்பானைச் சேர்ந்த மலை ஏறும் நிபுணர். எவரெஸ்ட் சிகரத்தின் இருபக்கங்கள் வழியாகவும் உச்சிக்குச் சென்று சாதனை படைத்த முதல் வீரர் இவர்தான்.

⊙ 'பேட்ரிக் செரு' என்பர்தான் சைக்கிள் ரேஸில் அதிக முறை வெற்றி பெற்ற விளையாட்டு வீரர். பெல்ஜியத்தில் நடத்தப்படும் 6 நாட்கள் தொடர் சைக்கிள் பந்தயத்தில் 1980 ஆம் ஆண்டு வரை 72 முறை வெற்றி பெற்று உலக சாதனையை ஏற்படுத்தினார்.

⊙ கத்தி விழுங்குவதில் கிங்டேர் டெவிலின் என்பவர் உலக சாதனையை செய்திருக்கிறார். இவர்

கத்தி விழுங்குவதற்கு பயிற்சி அளிக்கும் நல்ல ஒரு பயிற்சியாளர்.

இவர் 23 அங்குல நீளமுள்ள கூர்மையான 12 கத்தியை விழுங்கிச் சாதனை செய்துள்ளார்.

இச்சாதனையை இதுவரை எவரும் முறியடிக்க வில்லை. இவர் டென்மார்க் நாட்டின் கோபன் காஜன் நகரைச் சேர்ந்தவர்.

⊙ 1940 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் ஒரு காலணிக் கடையின் முதலாளியையும்அவர் தயாரித்த இரண்டு மீட்டர் உயரமுள்ள ரப்பர் காலணியையும் பாரீஸ் நகரில் தங்கள் கடைமுன் வைத்தனர்.

இத்தாலி நாட்டுடன் இணைந்து பல நூற்றாண்டுகளாக இது வைக்கப்பட்டு இருக்கிறது. இரண்டாம் உலகப்போர் முதல் இன்று வரை பல சிக்கல்கள் ஏற்பட்டாலும் இந்த காலணியை மட்டும் அவரின் வாரிசுகள் பத்திரமாக வைத்து பாதுகாத்து வருகிறார்கள்.

இன்றும் 'வியாபாரத்தில் முன்னணியில் உள்ள இந்த நிறுவனம் இந்த இரண்டு மீட்டர் உயரமுள்ள காலணியைக் கின்னஸ் புத்தகத்தில் பதித்துள்ளது.

⊙ உலகத்தில் அதிக நாடுகளுக்குச் சென்று சுற்றுப் பயணம் செய்து வந்தவர் என்ற சிறப்புக்குரியவர் 'ஜேஸிஉறார் சோஸ்டைல்' என்பவர்தான்.

இவர் 161 சுதந்திரமடைந்த நாடுகளையும், 60 சுதந்திரம் அடையாத நாடுகளையும் சுற்றிப் பார்த்து வந்திருக்கிறார்.

இவர் மொத்தமாக 1,626,605 மைல்கள் சுற்றிவந்து இருக்கிறார். இவரைப் பற்றி யு.என். மக்கள் தொகைக் குறிப்பில் 1977 இல் குறிக்கப்பட்டுள்ளது.

⊙ அதிகம் ஆழமில்லாத மிகச் சிறிய நீச்சல் குளத்தில் 28அடி உயரத்திலிருந்து டைவ் அடித்து சாதனை புரிந்திருக்கிறார் ஒருவர். அவர் பெயர் 'ஹென்றிலாமொத் என்பவர்தான். இவருக்கு வயது 75. இவர் டைவ் அடித்த நீச்சல் குளத்தில் பன்னிரண்டரை அங்குலம்தான் நீர் இருந்தது.

இந்த நிகழ்ச்சி கலிஃப் நாட்டின் நார்திட்ஜ் நகர் டெலிவிஷனில் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 ஆம் தேதி காட்டப்பட்டது.

ஆழமான குளத்தில் அதிக உயரத்தில் இருந்து டைவ் அடிக்கலாம். ஆனால் ஆழமில்லாத குளத்தில் இதுபோன்று டைவ் அடிப்பது உயிருக்கே உலை வைத்துக் கொள்வதாகும்.இருந்தாலும் இந்தச் சாதனைச் செயலை ஹென்ரி லாமொத் செய்து உலக அளவில் புகழ் பெற்றுவிட்டார்.

⊙ சைனாவில் உள்ள திச்சிசியான் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனின் பெயர் பிவா. நான்கு வயது. இவனது எடையோ 55 கிலோ. அவ்வளவு குண்டு.

இந்த 'பெரிய' மனிதன் உலக அளவில் பேசப்படுகிறான். கின்னஸிலும் இடம் பிடிக்க இருக்கிறான். இந்த வயதில் இந்த எடையில் உலக அளவில் இவனே முன் நிற்கிறான்.

⊙ ஒரு பூச்செண்டு உலக அளவில் புகழ் பெற்று விட்டது. ஆமாம்.

U.A.E. பிரசிடெண்டாக இருப்பவர் செய்யது இப்னுசுல்தான். இவர் ஒரு அறுவை சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்தார்.

மிகவும் ஆபத்தான அந்த அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு **U.A.E.** திரும்பி அவரை வரவேற்க அபுதாபியில் ஒரு பிரமாண்டமான அளவில் பூச்செண்டு ஒன்றினை உருவாக்கினார்கள்.

அந்தப் பூச்செண்டின் அளவு இதுதான். 45 சதுர மீட்டர் பரப்பளவும் 15 மீட்டர் உயரமும் கொண்டது. இதை தயாரிக்க 3 லட்சம் வெவ்வேறு வகையான பூக்களை பயன்படுத்தப்பட்டதாம்.

⊙ 1991 ஆம் ஆண்டு பெர்த் நகரில் க்யான்உறர்வ் என்ற வீராங்கனை 50 மீட்டர் (பட்டர்பிளை பிரிவு) தூரத்தை 50 மீட்டர் கடந்தது உலக சாதனை.

இந்த நீச்சல் தூரத்தையே கேய் உறியூஜ௰ என்ற சீன வீராங்கனை மொனாகா நாட்டில் 27.26 விநாடிகளில் கடந்தார். இது ஓர் உலக சாதனை. (நீச்சலில் அடிக்கடி உலக சாதனை செய்யப்படுவது இல்லை) இந்த சாதனை கடந்த 25.5.97 இல் செய்யப்பட்டது.

⊙ தொடர்ந்து எட்டு வருடத்தில் 80 முறை ஒலிம்பிக் பந்தயத்தில் பளு தூக்குவதில் வெற்றி பெற்று உலக சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார் 'வஸிலி அலக்ஸியவ்' என்ற பளுதூக்கும் வீரர்.

இவர் ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர். 1970 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பளுதூக்கும் போட்டியில் வெற்றி பெற்று சாதனை புரிந்திருக்கிறார்.

⊙ 1996 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக்கின் போது ஷான் என்ற சீன வீராங்கனை 50மீட்டர் ப்ரிஸ்டைல் இறுதிச் சுற்றில் ஏழாவதாக வந்து சேர்ந்தார். அப்போது அவர் எடுத்துக் கொண்ட நேரம் 56.59 விநாடிகள்.

நியான் என்ற இன்னொரு சீன வீராங்கனை 56.80 விநாடிகளில் வந்து சேர்ந்தார். மொனாகோ நாட்டில் நடந்த சர்வதேச நீச்சல் போட்டியில் இந்த இருவீராங்கனைகளும் இந்தத் தூரத்தை 54.01 விநாடிகளில் கடந்து உலக சாதனை புரிந்து விட்டனர்.

ஒலிம்பிக்கில் அடைந்த இவர்கள் சோர்ந்து போகாததால்தான் இந்த உலக சாதனையை நிகழ்த்த முடிந்தது.

⊙ யூ.எஸ். விமானப் படையைச் சேர்ந்த வீரர்களின் சாதனை சற்று வித்தியாசமானது. இவர்கள் அதிக அளவு வெப்பக் காற்றினை, நிர்வாணமாக நின்று தாங்கிக் கொண்டு சாதனை புரிந்திருக்கிறார்கள். இவர்கள் மீது செலுத்தப்பட்ட வெப்பக் காற்றின் அளவு 400 ஃபாரன்உறீட். இச்சாதனை 1960 ஆம் ஆண்டு நடந்தது.

உடலில் அதிகமான உடையை அணிந்து கொண்டு 500 ஃபாரன்உறீட் வெப்பக் காற்றினைத் தாங்கியும் இவர்கள் உலக சாதனை செய்துள்ளனர்.

⊙ இரண்டு வெப்பக்காற்று பலூன்கள் மூலம் 8,848 மீட்டர் உயரமுடைய எவரெஸ்ட் சிகரத்தை கடந்து 4 பேர் சாதனை படைத்துள்ளனர்.

வெப்பக்காற்று பலூன்களில் பறந்து எவரெஸ்ட் சிகரத்தைக் கடந்துள்ளது. இதுவே முதல் முறையாகும்.

முதலாவது வெப்பக்காற்று பலூனில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிறிஸ்ட்டியூகிறிஸ்ட் பிரிட்டனைச் சேர்ந்த லியோ டிக்கின்சன் ஆகியோர் பறந்து சென்றனர்.

இரண்டாவது வெப்பக் காற்று பலூனில் பிரிட்டனைச் சேர்ந்த ஆண்டி எல்சனும் எரிக்ஜோன்ஸூம் பறந்து சென்றனர். இவர்கள் எவரெஸ்ட் சிகரத்தைக் கடக்க ஒரு மணி நேரமாயிற்று.

⊙ ஜீன் செளபோன் என்ற 20 வயதுப் பெண்மணியின் சாதனை மிக மிக வித்தியாசமான சாதனையாகும்.

இந்தப் பெண்ணிற்கு இதய வலி வந்தது. 1977 ஆம் ஆண்டு 19 ஆம் நாள் இவருடைய இதயம் திடீரென்று வேலை செய்யாமல் நின்றுவிட்டது. ஆனால், கனடாவில் மணிடோவா நகரிலுள்ள 'வின்னிபெக் மெடிகல் சென்டரில் பணிபுரியும் 26 டாக்டர்கள், பெரிடானியல் டைலிஸிஸ் சிகிச்சையின் மூலம் தொடர்ந்து 8 மணி நேரம், 32 நிமிடம் முயன்று நின்று போன இதயத்தை இயங்கச் செய்து அவளை உயிர்பெறச் செய்து விட்டனர்.

நீண்ட நேரம் இதய இயக்கம் நின்று உயிர் பிழைத்திருக்கும் ஒரே பெண் இவள்தான். இவள் கனடாவைச் சேர்ந்தவள். இது ஓர் உலகச் சாதனையாகும்.

⊙ ஆஸ்திரேலியாவில் உள்ள மென்போர்ன் நகரைச் சேர்ந்தவள் மாசென். 1975 மார்ச்சில் 89 மணிநேரம் 32 நிமிடம் இடைவிடாது துணிகளுக்கு 'இஸ்திரி' போட்டுச் சாதனைப் படைத்தாள்.

⊙ அமெரிக்காவிலுள்ள இல்லினாய்ஸ் மாநிலத்தைச் சேர்ந்தவர் டோனி பெல்லஸ். இவர் எலெக்ட்ரிக் அக்கார்டியன் இசைக் கருவியை 53 மணி நேரம் இடைவிடாது வாசித்து உலக சாதனையைப் புரிந்துள்ளார்.

⊙ அந்தரத்தில் கயிற்றில் நடப்பது, சைக்கிள் ஓட்டுவது முதலியவற்றைப் பார்க்கிறோம்.

ஹென்றி ரோச்சாட்டின் என்ற பிரெஞ்சுக்காரர் செய்த சாதனை இது. 185-நாட்கள் தொடர்ந்து, பூமியிலிருந்து 25-மீட்டர் உயரத்தில் கட்டப்பட்ட

கயிற்றிலேயே வாழ்ந்து காட்டினார். அதே கயிற்றில் இரவு நேரத்தில் வீழ்ந்துவிடாமல் அயர்ந்து தூங்கினார். டாக்டர்கள் வியந்தனர். இருபத்து மூன்று ஆண்டுகள் ஆகியும் இவரது சாதனை இன்னும் முறியடிக்கப் படவில்லை.

⊙ உலகிலேயே மிகப் பெரிய கிடார் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்து உள்ளது. கலிபோர்னியாவைச் சேர்ந்த ரிக்கிளார்க் என்பவர் இந்த ராட்சத இசைக் கருவியை உருவாக்கியுள்ளார்.

மின்சார வசதியுடன் இசைக்க வல்ல இந்த பெரிய கிடாரின் நீளம் 38 அடி ஆகும். இதன் எடை 1865 ராத்தல் ஆகும்.

⊙ ஜெரோமிர் வாக்னருக்கு வந்த ஆசை இருக்கிறதே, அது ஒரு விபரீத ஆசை என்றே சொல்ல வேண்டும். இவர், செக்கோஸ்லாவாகியாவில் பிறந்த மேற்கு ஜெர்மானியர்.

இவரது ஆசை என்ன தெரியுமா? பஸ்சில், ரயில் கூரைமீது அமர்ந்து பயணம் செய்வதைப்போல,

விமானத்தின் கூரைமீது அமர்ந்து ஏன் பயணம் செய்யக்கூடாது என்பதுதான்.

எண்ணத்தைச் செயல்படுத்தி விட்டார். இரண்டு எஞ்சின்கள் உள்ள பிரிட்டிஷ் விமானத்தின் கூரைமீது அமர்ந்து மேற்கு ஜெர்மனியிலிருந்து, நியூயார்க் வரையில் பறந்தார்.

இப்படி உலகில் முதன் முதலாக அட்லாண்டிக் பெருங்கடலை கடந்து இவர் உலக சாதனை புரிந்தார்.

⊙ உலகிலேயே வயதான பெண்மணி எனக் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற ஜுன் கல்மெண்ட் கடந்த ஆகஸ்ட் 4-இல் (1997)-ல் மரணமடைந்த பின் கனடா நாட்டைச் சேர்ந்த மரிலூயி ஃப்ரோனி பெய்லூர் உலகின் மிக வயதான மங்கை எனக் கின்னஸில் இடம் பெறப் போகிறார்.

117-வயதாகும் மரிலூயிக்கு சைவ உணவே விருப்பமாம். இருமுறை மணமாகியிருக்கும். இவருக்கு 300 பேரன் பேத்திகள் இருக்கின்றனர்.

⊙ 1926 இல் அரியணை ஏறிய ஜப்பானின் சக்ரவர்த்தி உறிரோஉறிடோ ஜப்பானியரால் கடவுள் அவதாரம் எனப் போற்றப்பட்டவர்.

1989 இல் அவர் மரணமடைந்தபோது, ஜப்பான் முழுதும் ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியது. பேரரசரின் மெய்க்காப்பாளர்கள் அரசரின் பிரிவைத் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டனர்.

மிகவும் ஆடம்பரமான முறையில் நடைபெற்ற அரசரின் இறுதிச் சடங்கிற்கு 3 கோடி டாலர் (280 கோடி ரூபாய்) செலவானதாம்.

உலகிலேயே அதிக செலவில் நடைபெற்ற இறுதிச் சடங்கு என உலக வரலாற்றில் இடம் பிடித்துள்ளது,

⊙ டெஸ்ட் போட்டிகளில் முதல் 429 நாட்களிலேயே 100 விக்கெட்டுகளை கபில்தேவ் படுவேகமாக எடுத்தார். இந்த அதிவேக உலக சாதனை அப்படியே இன்னும் அசைக்க முடியாதபடி இருக்கிறது.

⊙ இது ஈபில் டவரை அடைவதில் நடந்த உலக சாதனை.

பாரிஸ் நகரில் உள்ள ஈபில் கோபுரத்தை அடைய படிக்கட்டுகள் மற்றும் லிப்ட் வசதியும் உண்டு. பிரான்ஸின் ரிச்சர்ட் என்ற இந்த சைக்கிள் வீரர், சைக்கிள் மூலம் இந்தப் படிக்கட்டுகளில் 36 நிமிடங்களில் ஏறி வந்து சாதனை படைத்துள்ளார்.

தான் பெரும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறவே இந்த உலக சாதனையைச் செய்தாராம்.

⊙ பிரான்ஸின் 'ஸ்பைடர் மேன்' என்று அழைக்கப்படும் அலெய்ன் ராபர்ட் என்பவர்தான் ஒபிலிக்ஸ் நகரின் புகழ் பெற்ற பண்டைய கோபுரமான டிலாகன் கார்டி யின் மீது எந்த ஓர் உபகரணமும் இல்லாமல் ஏறி தன் சாதனையைச் செய்தார்.

34-வயதாகும் இவர் அடுத்து பார்ஸியின் மலையின் உச்சிக்கும் எந்த ஒரு உபகரணமும் இல்லாது ஏறி சாதனை படைக்கவிருக்கிறார்.

இறுதியாக எவரெஸ்ட்டையும் இதே முறையில் அடைய இருக்கிறாராம்.

⊙ பாங்காங்கில், உலகிலேயே பெரிய ரெஸ்டாரெண்ட் 'ராயல் டிராகன்' ஆகும். கடற்பொருள் சம்பந்தமான உணவே இதன்சிறப்பு ஆகும்.

கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள இந்த ரெஸ்டாரெண்டில் 322- சமையல்காரர்களும், 1000 வெயிட்டர்களும் பணிபுரிகின்றனர்.

பல பந்தாட்ட மைதானத்தின் பரப்பளவைக் கொண்ட இந்த ரெஸ்டாரெண்டில் வெயிட்டர்கள் சமையலறையில் இருந்து உணவு பரிமாறும் டேபிளை அடைய 'ஸ்கேட்டுக்களைப்' பயன்படுத்துகிறார்கள்.

⊙ 'ஜாட்டோபெக்' என்ற செக்கோஸ்லாவாகியா வீரர் 18 உலக சாதனைகளை மாரத்தான் போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை படைத்து உள்ளார்.

இவர் 1958 ஆம் ஆண்டு தமது 36-வது வயதில் உலகப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

⊙ ஜூடோ விளையாட்டில் புகழ் பெற்றவர்கள் ஜப்பானியர்கள் என்றுதான் யாரைக் கேட்டாலும் சொல்வார்கள்.

அப்படிப்பட்ட ஜப்பானியரையே வென்று உலக சாம்பியன் பட்டத்தை வென்ற முதல் அயல்நாட்டு வீரர் உறாலந்தைச் சேர்ந்த ஆண்டன் கீஸிங் என்பவர்தான்.

1961-ஆம் ஆண்டு தன் 27 ஆவது வயதில் வென்றார் இவர். இது குருட்டு அதிர்ஷ்டம், அதனால்தான் ஜப்பான்காரரை வென்று விட்டார், என்று பலர் அவர் வெற்றி பெற்றபோது கூறி வந்தார்கள்.

அதெல்லாம் ஒன்றுமில்லை என்கிறது அவரது வரலாறும், உழைப்பும். ஆமாம் உலக வரலாற்றில் தொடர்ந்து ஆறுமுறை ஆறு ஆண்டுகள் வரை உலகச் சாம்பியன் பட்டத்தை வென்றவர் இவர் மட்டுமே.

உழைப்பும், நம்பிக்கையும் என்றாவது தோற்றதுண்டா?

⊙ இந்த உலக சாதனையைப் பிரிஸ்டலில் உள்ள உறானம் என்ற இடத்தில் உள்ள ஓர் ஓட்டலில் நடந்த சாதனை இது.

1988 ஏப்ரல் முதல் தேதியன்றுதான் பிலிப் உறியர்ட் என்ற பண்ணைக்காரர் 122 மணி 30 நிமிடங்கள் வரை தொடர்ந்து குளிர்ந்த தண்ணீரில் குளிக்கும் சாதனையைச் செய்து உலக சாதனை புரிந்தார்.

⊙ கல்கத்தாவைச் சேர்ந்தவர் முகமது மசதூர் ரகுமான் வைத்யார். வயது 28.

நீண்ட காலம் நீச்சல் பயிற்சி செய்து வந்த இவர் 1997 ஆம் ஆண்டு ஓர் அரிய பெரிய சாதனை ஒன்றை நிகழ்த்திக் காட்டியுள்ளார். ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்ததுதான் அது.

ஆசியாவிலலேயே இந்தச்சாதனையை நிகழ்த்திய முதல் வீரர் இவர்தான் என்ற பெருமைக்குரியவர். (சர்வதேச ரீதியில் இரண்டாவது வீரர்)

இதற்கு முன்பு குற்றாலீசுவரன் உள்பட நிறைய பேர் இந்த கால்வாயை நீந்திக் கடந்து இருக்கும்போது, இவர் செய்தது எப்படி சாதனை ஆக முடியும் என்ற ஐயம் மனதில் தோன்றும்?

அவர்களுக்கும் இவருக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. இவர் இரண்டு கால்களையும் இழந்தவர்.

⊙ உலகில் வேகமாக டபுள் செஞ்சுரி போட்டவர் ரவிசாஸ்திரிதான். 113 நிமிடங்களில் டெஸ்ட்மேட்சில் போடுவதற்குப் பதற்றமில்லாமல் விளையாடியவரும் இவரே.

⊙ அமெரிக்காவிலே ஒரு போட்டி. அதுவும் நடனப் போட்டி. பரிசு 2000 டாலர்.

இந்தப் போட்டியில் மைக்ரிடாஃப்ன்னு ஒருவர் அவருக்கு இணையாக எடித் பவுட்ரெக்ஸ் என்ற பெண். இந்த இரண்டு பேரும்தான் நடனம் ஆடினார்கள்.

1930- ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதி தொடங்கி அடுத்த வருடம் ஏப்ரல் முதல் தேதி வரை தொடர்ந்து ஆடியிருக்கிறார்கள்.

இவர்கள் தொடர்ந்து நடனம் ஆடிய நேரம் 5. 148 மணிநேர சாதனை.

இப்படி ஒரு நீண்ட சாதனையை இதுவரை யாரும் முறியடிக்கவில்லை.

⊙ தற்போது மிகவும் அதிக வயதுடன் வாழும் டெஸ்ட் கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் மூவர்தான்.

அவர்களுள் மூன்றாவது வீரரான டான் பிராட்மனினன் 90ஆவது வயது பிறந்த நாளை ஆஸ்திரேலியாவில் பலரும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்த விழாவிற்கு அழைக்கப் பட்டவரான சச்சின் டெண்டுல்கர் டான் பிராட்மனிடம் தன் 'பாட்டில்' கையெழுத்து வாங்கி வந்தார். வாங்கி வந்த கையோடு ஒரு நாள் போட்டியில் அதிக செஞ்சுரி(18) களைப் போட்டவர் என்கிற உலக சாதனையையும் படைத்துவிட்டார்.

⊙ உலகில் எவ்வளவோ விசித்திரமான ஜோடிகள் கணவன்-மனைவி ஆகி இருக்கிறார்கள்.

கறுப்பு பெண்ணிற்கு சிவப்பு மாப்பிள்ளை,நொண்டி மாப்பிள்ளைக்கு அழகுள்ளப் பெண், குட்டை மாப்பிள்ளைக்கு நெட்டைப் பெண் என்று இப்படி ஜோடி அமைவதை நாம் பார்த்திருக்கிறோம்.

இந்தப் பட்டியலில் வித்தியாசமான ஒரு புது ஜோடி சேர இருக்கிறது. மாப்பிள்ளையான ரிச்சர்ட் பிளாக் மென் என்பவர் உயரம் 7 அடி 4 அங்குலம். இவர்காதலி சாரா. பிளாக்மெனின் முழங்கை அளவிற்குக் கூட உயரம் இல்லை. உயரமோ நான்கடி ஏழங்குலம்தான். இவர்களது ஜோடி பொருத்தம் கின்னஸில் இடம் பிடிக்க இருக்கிறது.

⊙ ஜெஸ்ஸி ஓவன்ஸ் என்ற அமெரிக்க தடகள வீரர். 1935 ஆம் ஆண்டு 45 நிமிடங்களில் 4 உலக சாதனைகளை முறியடித்தார்.

இத்தோடு அடுத்த ஆண்டு பெர்லினில் நடந்த ஒலிம்பிக்கில் 12 ஒலிம்பிக்கில் 12 ஒலிம்பிக் சாதனைகளையும் தகர்த்து எறிந்தார். இவர், உறிட்லர் மீது இருந்த கடுங்கோபத்தால்தான். பார், மனிதனின் சக்தியைப் பார்' என்று ஓடினாராம். சொன்னபடியே 4 தங்கப் பதக்கங்களையும் வென்று காட்டினார்.

எண்ணத்தில் தூய்மை இருந்தால் இந்த அளவற்ற சக்தி எல்லோருக்கும் வரும். வெற்றியும் வரும்.

⊙ ஒரு சீன மருத்துவர் பணிபுரிய ஆரம்பித்து 18 ஆண்டுகள் கூட நிறைவு பெறவில்லை.

அதற்குள் சோர்வின்றி மோதிரத்தைக் கெடிகாரத்தை, சாப்ஸ்டிக் (குச்சி) என்று எதையாவது விழுங்கி விட்டு வருபவர்களை உடனுக்குடன் காப்பாற்றியுள்ளார்.

வாய்வழியாகக் குடல் பகுதிக்குள் ஆராயும் கருவியை வைத்து முதலில் ஆராய்வார்.

ஓர் அங்குலம் அகலம் கொண்ட பெரிய பொருட்களைக் கூட வெளியே எடுத்து உயிர்களைக் காப்பாற்றி இருக்கிறார்.

கடமையுணர்வுடன் மனித நேயமும் கொண்ட இந்த மருத்துவர் ஷாங்காய் மருத்துவப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிகிறார். இவரின் பெயர் ஜாங்ஷான் ஜெஷன்.

உலக சாதனை புரிந்துள்ள இந்த மருத்துவர் நோயாளிகளின் வயிற்றில் இருந்து எடுத்த பொருட்களின் எண்ணிக்கை 42,195.

⊙ ஈட்டி எறியும் போட்டியில் குவைத் நாட்டின் தடகள வீரர் யகத் அல் முட்டாயிரி உலக சாதனை புரிந்துள்ளார்.

இவர் ஈட்டி எறிந்தது 33.68 மீட்டர்கள். வளைகுடா நாடுகளுக்கு இடையே நடத்தப்பட்ட இப்போட்டிகளில் இந்தச் சாதனையை இண்டர்நேஷனல் ஃபெடரேஷன் ஆப் டிராக் அண்ட பீல்ட் உலக சாதனையாக அங்கீகரித்துள்ளது.

⊙ உலகிலேயே மிகப் பெரிய குடும்பம் (சீனா) ஹாங்காங் நகரில் வசிக்கிறது.

நான்கு தலைமுறைகளைச் சேர்ந்த 115 உறுப்பினர்கள் உள்ளனர். 92 வயதாகும் யுஃபெங்கிக்கு இரண்டு வயது கொள்ளுப் பேரன் இருக்கிறான். தலைவர்.

1920 இல் பாவு மின்சென் என்ற பெண்ணை மணந்து கொண்டார். இவர்களுக்குப் பத்துப் பெண்களும், இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்தனர். கடைசிப் பையன் 1952 இல் பிறந்தான்.

இவர்களின் முதல் பெண்ணிற்கு எட்டுக் குழந்தைகள். இவர்கள் அனைவரும் 40 வீடுகளில் வாழ்கிறார்கள். கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுகிறது.

⊙ உலகிலேயே மிகவும் நீளமான அதிக எடையுள்ள 'கேக்' ஒன்றை துபாயில் செய்திருக்கிறார்கள்.

25-வது ஆண்டு துபாய் சுதந்திர தினக் கொண்டாட்டாத்தின் போதுதான் இந்த மிகநீளமான 'கேக்' செய்து காட்டப்பட்டது.

2.5 கிலோ மீட்டர் நீளத்திற்குச் செய்யப்பட்ட இந்தக் கேக்கின் எடை 67 டன் எடையுள்ளதாகும்.

உலகிலேயே அதிக எடையும், அதிக நீளமும் உடையது இந்த கேக் என்று கின்னஸ் உலக ரிகார்ட்டு புத்தகத்தில் பதிவாகி உள்ளது.

⊙ நான்கு ஆண்டுகள் ஆய்விற்குப் பின் உலகிலேயே அதிவேக ஆனால், எடை குறைந்த உறுதியான பந்தயத்திற்கான சைக்கிளை இங்கிலாந்து கம்பெனி உருவாக்கியுள்ளது. ULTIMATE - எனப்படும் சைக்கிள் விமானம் தயாரிக்கும் உலோகக் கலவையில் தயாராகி இருப்பதால் எடைக் குறைவும், உறுதியும் இதன் சிறப்பு அம்சங்கள் ஆகும்.

இதன் மிஷின் எடை 49 கிலோ. இதன் பேரிங் அமைப்பு 30 சதவிகித உராய்தலை மட்டும் தர, இதன் டயர் எடை 85 கிராம்தானாம்.

இந்த சைக்கிள் தயாரிக்க யோசனை கூறிய 'புரூஸ் பர்ஸ்ஃ போயிட் சைக்கிள் பந்தயத்தில் உலக ரிகார்ட் பெற்றவர்.

உலக சாதனையாளர் 4 ரூஸ். இதில் 334.5 கிலோ மீட்டர் வேத்தில் இந்த சைக்கிளில் பயணம் செய்து காட்டியுள்ளார்.

⊙ கிரிக்கெட் போட்டிகளில் இரண்டுமுறை நானூறுக்கும் மேற்பட்ட ரன்கள் எடுத்த ஒரே வீரர் எச்.பான்ஸ்போர்ட் ஏஞ்சல்ரே.

மெல்போர்னில் 1922-1923 ஆம் ஆண்டுகளில் விக்டோரியா அணி சார்பாக விளையாடியபோது டாஸ்மேனியா அணிக்கு எதிராக 429 ரன்கள் எடுத்தார்.

1927-28 ஆம் ஆண்டுகளில் விக்டோரியா அணி சார்பாக மெல்போர்னிலேயே குயீன்ஸ்லாந்து அணிக்கு எதிராக விளையாடியபோது 437 ரன்கள் எடுத்தார்.

இச்சாதனை இதுவரை உலகில் எவராலும் முறியடிக்கப் படவில்லை.

⊙ வி.ஏ.கே ரங்கராவின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்று இருக்கிறது. இவர் சென்னையைச் சேர்ந்தவர். இவரது சாதனை இதுதான்.

30-ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரிய கிராமபோன் ரிகார்டுகளை சேகரித்து சேர்த்து வைத்திருக்கிறார்.

இவ்வளவு இசைத்தட்டுகளைச் சேர்த்து வைத் திருப்பதால்தான் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறார்.

1894 இல் இசைத் தட்டுகள் அறிமுகமாயின. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவுக்கு வந்தன.

1902 இல் இந்தியாவில் அறிமுகமான முதல் இசைத்தட்டு பரோடாவைச் சேரந்த சிவில் என்ஜினியர் நரேந்திரா ஸ்ரீமாலி என்பவரிடம் இருக்கிறது.

1910 மே 9 ஆம் தேதி, ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அரியணை ஏறினார். அப்போது மூன்று நிமிடம் உரையாற்றினார். அந்த உரை அடங்கிய இசைத்தட்டும் இவரிடம் இருக்கிறது.

திரைப்படங்களைப் பொருத்தவரை 'மாதுரி' என்ற இந்திப் படத்தின் பாடல்தான் முதன் முதலில் இசைத் தட்டு வடிவம் பெற்றது.

1932 இல் வெளியான இந்த இசைத்தட்டும் ஸ்ரீமாலிடம் இருக்கிறது.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஜான் கென்னடி, முஜிபுர் ரஉறிமான் போன்றோரின் உரைகள் அடங்கிய இசைத் தட்டுகளையும் வைத்திருக்கிறார். இவ்வளவு இசைத்தட்டுகளும் இவர் எப்படி சேகரித்தார்.

'காயலான் கடை' என்கிறார். ஸ்ரீமாலி மிகுதியான இசைத்தட்டுகளை இங்கிருந்துதான் வாங்கினாராம்.

தற்போது இவரிடம் 7 ஆயிரம் இசைத்தட்டுகள் இருக்கின்றன.

⊙ 1996 ஆம் ஆண்டு மிக உயரமான இடத்தில இருந்து யாங்ட்ஜ் ஆற்றை ஒருவர் கடந்தார். 334 மீட்டர் தூரம் வரை கயிற்றில் நடந்த நீண்ட தூர 'டைட்ரோப்' வாக்கிங் இது உலக சாதனையும் கூட.

⊙ உலகில் அதிக விலையுள்ள தபால் தலையும் தபால்உறையும் இதுதான். விலை ரூபாய் 56,800,000 இந்த ஆரஞ்சு வண்ண ஒரு பென்னி தபால் தலையும் உலகின் முதல் தபால் உறையும் 1847 ஆம் ஆண்டு இந்து மகா சமுத்திரத்தில் உள்ள மொரீஷியஸ் தீவில் வைத்து வெளி யிடப்பட்டதாகும்.

ஜெனீவாவைச் சேர்ந்த ஒரு வங்கி ஊழியரிட மிருந்து வாங்கப்பட்ட இந்தக் கடித உறை சூரிச்

நகரில்தான் ஏலத்தின் மூலம் இவ்வளவு ரூபாயைச் சாம்பாதித்துத் தந்து உலக சாதனையும் புரிந்து விட்டது. உலகில் அதிக விலைக்கு ஒரு கவர் விற்கப்பட்டது. இதுவே முதல் முறை.

⊙ இது நீருக்குள் நடந்த சாதனை.

ஜெர்மன்-பெட்ஷென்ஸ் டெய்ன்ங்கற நகரில் தண்ணீருக்குள் செஸ் விளையாடி உள்ளனர். மைக்ககேல்ருட்ஸ், பியா என்ட்ரெஸ் என்பதுதான் அவர்கள் பெயர்.

இவர்கள் இருவரும் ஒரு நீச்சல் குளத்தில பத்து அடி ஆழத்தில் உட்கார்ந்து செஸ் விளையாடி இருக்கிறார்கள்.

தண்ணீரில் மிதந்து விடாத வகையில் செஸ் பலகையை கனமான பலகையில் தயார் செய்திருக்கிறார்கள்.

மூச்சு விடுவதற்கும், பார்ப்பதற்கும் தேவையான சாதனங்களை முகத்திலே மாட்டிக் கொண்டு, காய்களை

நகர்த்தி வழக்கமாகச் செய்வார்கள். விளையாடுவது போல் எட்டு மணி நேரம் வரை தண்ணீருக்குள் விளையாடி இருக்கிறார்கள்.

இந்த உலக சாதனை பலராலும் வியப்போடு பார்க்கப்பட்டதாகும்.

⊙ கார் பந்தயத்தில் 51 முறை வெற்றி பெற்றவர் அலெய்ன் பிராஸ்ட் என்ற பிரெஞ்சுக்காரர். மணிக்கு 320 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும் சாலைப் பந்தயம் இது.

உலக சாம்பியன் பட்டத்தையும் 1985,1986 ஆம் ஆண்டுகளில் வென்று உள்ளார்.

இவருடைய ஒரே யோசனை, எப்போதும் அறிவுடன் ஒரே வேகத்தில் சீராகச் செல்லுங்கள். எல்லாத்துறையிலும் வெற்றி பெறலாம் என்று இவர் சும்மா சொல்லவில்லை 200 முறைஃபார்முலா ஒரு நாள் ரேஸில் கலந்து கொண்டு 51 முறை வென்ற பிறகுதான் இதைச் சொல்லியுள்ளார்.

⊙ ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஷேன்கோல்ட் என்ற நீச்சல் வீராங்கனை 1972 ஆம் ஆண்டு மியுனிச் ஒலிம்பிக்கில் மூன்று தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என்று வென்றார். அப்போது இவர் வயது 15. இந்த வெற்றிப் போதையில் இவர் மயங்கி விடாமல் இருந்தார். அதனால் மீண்டும் 1972 இல் 100 மீட்டர் முதல் 1500 மீட்டர் வரை உள்ள பெண் பிரிவுகளில் அனைத்திலும் உள்ள பழைய சாதனைகள் யாவையும் உடைத்து உலக சாதனை புரிந்தார்.

⊙ பாரீஸில் உள்ள புகழ்பெற்ற ஈஃபெல் கோபுரத்தின் படிகட்டுகளில் சைக்கிளில் ஏறி உச்சிவரை சென்று சாதனை செய்திருக்கிறார் உற்யூஜஸ் ரிச்சர்ட் என்ற இளைஞர்.

• இவர் இச்சாதனைக்காக மலை ஏறுவோர் பயன்படுத்தும் சைக்கிளை இவர் பயன்படுத்தினார். இவருக்கு எல்லாப்படிக்கட்டுக்களையும் ஏறி முடிக்க எடுத்துக்கொண்ட நேரம் 36 நிமிடம் 26 நொடிகள் மட்டுமே.

⊙ பார்வை தெரியாதவர்கள் கூட இப்போது சதுரங்கம் விளையாடுகிறார்கள்.

கட்டங்களையும், காய்களையும் தொட்டுப் பார்த்து உணர்ந்தே விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள்.

மும்பையில் 300 பேர் சதுரங்கப் போட்டியில் கலந்து கொண்டார்கள். அவ்வளவு பேர்களும் பார்வை இழந்தவர்கள்.

இவர்களில் சாம்பியன் பட்டத்தைப் பெற்றவர் 23-வயதான விலேஷ் பட். உலக அளவில் இவர் தகுதி பெற்று இருக்கிறார்.

⊙ மார்க் ஸ்பிட்ஸ் என்ற அமெரிக்க நீச்சல் வீரர் நீச்சலில் 23 உலக சாதனைகள் படைத்துள்ளார்.

இதில நான்கு சாதனைகள் ஒரே ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கங்களையும் பெற்றுத்தந்த சாதனையும் அடங்கும்.

ஒன்றை நன்றாகச் சாதிதத்தால் அது பல தொடர்ந்த சாதனைகளைத் தானே பெற்றுத் தந்துவிடும் என்பதற்கு இவரே ஓர் உதாரணம்.

⊙ காவோஷியங் என்பது தெற்கு தைவானின் உள்ள துறைமுகம். இங்கே தன் பற்களின் சக்தியை நிரூபிக்கும் வகையில் 320 டன் எடையுள்ள ஒரு கப்பலைப் பற்களால் ஆறு அடி தூரம் வரை இழுத்துச் சாதனை புரிந்தார் ஒரு இந்தியர். அவர் பெயர் நரீந்தர் சிங். இந்த கின்னஸ் சாதனை புரிந்த அவரின் வயது 35.

⊙ மேற்கு ஜப்பான் பகுதியில் உள்ள ஓகாவில் நாக என்ற இடம் உள்ளது.

இங்கே வருடாந்திரக் கயிறு இழுக்கும் போட்டியில் இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் பேர் இந்த ஆண்டு கலந்து கொண்டார்கள்.

இவ்வளவு பேர் கலந்து கொண்ட இந்த 'டக்-ஆப்' பார்போட்டியில் பயன்படுத்தப்பட்ட கயிறும் சாதாரணமானது அல்ல.

உலகில் பயன்படுத்தப்படும் மிகப் பெரிய கயிறு இது என்று கின்னஸ் புத்தகம் அங்கீகரித்த கயிறு இதில் பயன்படுத்தப்பட்டது. 1.58 மீட்டர் விட்டம் கொண்ட இந்தக் கயிற்றின் எடை 40 டன் நீளம், 186 மீட்டர்.

⊙ நாரிந்தர் சிங் மிகப்பெரிய பஸ் ஒன்றில் நிறைய ஆட்களை ஏற்றி வைத்து தனது பல்லினால் கட்டி இழுத்து சாதனை புரிந்தார்.

இச் சாதனையைச் சன்யாட்சென் மொமாரியல் கட்டடம் முன்பாக, கின்னஸ் புத்தகத்தின் நிர்வாகத்தினர், ஆய்வாளர்கள், அழைப்பின் பேரில் தைவானில் வைத்து, அவர்களின் முன்னிலையில் இந்த உலக சாதனையைச் செய்து காண்பித்தார்.

இந்த பஸ்ஸின் எடை 14 மெட்ரிக் டன். இந்த சாதனையாளரின் வயது 35.

⊙ ஆன்ட்ருவான் ஜிஜில் என்பது அவர் பெயர். தென்னாப்பிரிக்காவின் டிஸ்கோ நடனக் கலைஞர்.

இந்த 38 வயதுக்காரர் முன்பே 338 மணி நேரம் தொடர்ந்து 'டிஸ்கோ' ஆடி உலக சாதனை புரிந்தார்.

இவரே எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி நிதிக்கு நிதி சேர்ககவும், தன் நடன சாதனையை முறியடிக்கவும்

டிஸ்கோ நடனத்தை 400 மணி நேரம் இடைவிடாது ஆடி தன் உலக சாதனையைத் தானே முறியடித்தார்.

⊙ உலகில் முதன் முதலாகப் பயணிகள் இரயில் ஓடிய முதல் இடம் டார்லிங்டன். இது வடகிழக்கு இங்கிலாந்தில் இருக்கிறது.

இந்த இடத்தில் டேவிட் மாக் என்பவர் செங்கல் இரயிலைக் கட்டி சாதனை செய்திருக்கிறார். ஒரு செங்கல்லை எடுத்து வைத்துக்கட்ட சரியாக 4½ நிமிடம் வீதம் செலவாகி இருக்கிறது. 1,80,000 செங்கற்களைக் கொண்டு 40 மீட்டர் நீளமுள்ள இந்த இரயிலை 100 பேர் கொண்ட குழு ஏழு மாதங்களில் கட்டி முடித்தது.

இந்தக் குழுவில் இரயில் என்ஜினைச் சரியாகக் கட்ட என்ஜீனியர்கள் சிற்பிகள், கொத்தனார்கள் என்று பல நிபுணர்கள் இடம் பெற்றிருந்தனர்.

திட்டம் முடிவடையும்போது கூடுதலாக 60 ஆயிரம் பௌண்டுகள் செலவாகிவிட்டன. 7,60,000 பௌண்டு செலவில் உருவாகியுள்ள இந்தச் செங்கல் இரயில் தற்போது பெரிய அளவில் வெளி நாட்டுப்பயணிகளால் இந்த சாதனை பேசப்படுகிறது.

⦿ உலகில் மிகப்பெரிய உண்ணத்தக்க ஒரே வீடு இதுதான். பெரிலின் ஓட்டல் வரவேற்பறை ஒன்றில் 6½ மீட்டர் உயரமுள்ள இந்த இஞ்சி ரொட்டி இல்லம் கட்டப்பட்டது.

செங்கல்லைப் போல ஆயிரத்திற்கும் அதிகமான ஜிஞ்சர் பிரட்டுகள் தயாரிக்கப்பட்டு இந்த 'எபின் ' ஓட்டல் கட்டப்பட்டது.

இதற்காக 18 டன் எடையுள்ள மாவு, முட்டை, சர்க்கரை முதலியன பயன்படுத்தப்பட்டன. உலகின் மிகப் பெரிய ரொட்டி இல்லமாகவும் இது பதிந்து கொள்ளப்பட்டுள்ளது.

⦿ டில்லியைச் சேர்ந்தவள் நிவேதிதா. எல்.கே.ஜி. படிக்கும் சிறுமி. இவள் காண்போர் வியக்கும் வண்ணம் பல்வேறு வகையான அற்புதமான மேஜிக் காட்சிகளை நொடிப்பொழுதில் செய்து காட்டி அசத்துகிறாள்.

இவள் இதன் முந்தைய சாதனையான எட்டுவயது சிறுவன் சங்கரை முறியடித்து சாதனை செய்யப் போகிறாள்.

⊙ பட்டம் என்பது வெறும் விளையாட்டுக்காக மட்டுமல்ல. பல உபயோகமான வழிகளிலும் இது பயன்படுத்தப்படுகிறது.

சிக்னல் காட்டுவதற்காகவும் பல்வேறு உயரங்களில் நிலவும் தட்ப வெப்ப நிலைகளைக் கண்டறியவும் பயன் படுத்தப்படுகிறது.

உலகிலேயே மிக அதிக எடை உள்ள பட்டம் ஒன்றினை ஜப்பானில் பறக்க விடப்பட்டது. 2500 கி.கி. எடை உள்ள இந்தப் பட்டத்தை நூற்றுக்கும் அதிகமான நபர்கள் தூக்கிச் சென்று பறக்கவிட்டு சாதனை செய்தார்கள்.

நமது நாட்டில் பட்டங்களுக்கான மியூசியம் ஒன்று அகமதாபாத்தில் உள்ளது. இது உலகத்தில் உள்ள இரண்டாவது மியூசியமாகும். முதல் மியூசிய்ம் டோக்கியோவில் உள்ளது.

⊙ நம் வீட்டுச்சிறுவர்கள் விளையாட்டில் சிகரெட் அட்டைகளைக் கொண்டு வீடுகட்டி விளையாடுதைப் பார்த்திருக்கிறோம்.

இதனை ஒரு மேல்நாட்டுக்காரர் சாதனையாகவே காட்டியுள்ளார். ஆம் ! 213-சிகரெட் அட்டைகளை அடுக்கி உலகச் சாதனையைக் கின்னஸிற்காக செய்துள்ளார்.

⊙ ராக்கி மார்சியானோ என்ற குத்துச் சண்டை வீரருக்கு ஒரு பெருமை உண்டு. இவர் தான் பங்கேற்ற அனைத்துப் போட்டிகளிலும் வென்றவர் ஆவார்.

எல்லா எடைப் பிரிவுகளிலும் இவர் கலந்து கொண்டு வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்க சாதனை. 49 வெற்றிகளில் 43 நாக் அவுட் அல்லது 'நீங்கள்தான் வெற்றி பெற்றவர் என்று போட்டிவீரர்கள் ஒப்புக் கொண்டவையாகும்.

எட்டு ஆண்டுகள் சர்வதேச அளவில் இவ்வளவு வெற்றிகளைக் குவித்த இவர் விமானத்தில் பயணியாகச் சென்று கொண்டிருந்தபோது விபத்தில் சிக்கிப் பலியானார்.

⊙ ஒரே வாரத்தில் இரண்டு நீச்சல் சாதனை களைச் செய்திருக்கிறார். அவர் பெயர், டெனிஸ்

பான்கரடேல். இந்த வீரர் 200 மீட்டர் பட்டஃபிளை பிரிவில் உலக சாதனை புரிந்தார். இரண்டு நாட்கள் கழித்து 100-மீட்டர் பட்டர்ஃபிளை பிரிவில் 51.94 விநாடிகளில் கடந்து உலக சாதனை புரிந்தார். சாதனை ஆண்டு 1996,

⊙ 1992-ஆம் ஆண்டு 147 ரோல்ஸ்ராய்ஸ் கார்கள் அணிவகுத்துச்சென்றது. ஓர் உலக சாதனை.

இதையடுத்து, நியூஜெர்ஸியைச் சேர்ந்த ஃபிராங்க் அல்லோக என்பவர் 1920 ஆம் வருட சிலிவர் கோஸ்ட் ரோல்ஸ் ராய்ஸ் கார்களை ஃபார்உறில்ஸ் பகுதியில் வரிசையாக நிறுத்தினார். இவருக்குச் சொந்தமான இந்த 154 கார்களும் வரிசையாகச் சென்று சாதனை புரிந்தன.

⊙ 'பங்க்கி ஜம்ப்' காட்சியை 33மில்லி மீட்டர் உயரத்தில சிறிய மினியேட்டர் காட்சியாக ஜெர்மனியின் 'மாரகுஸ் ருநைஉறாய்' என்பவர் உருவாக்கி இருக்கிறார்.

இவருடைய அரிய சாதனையைக் கின்னஸ் புத்தகம் ஒப்புக் கொண்டு உலக சாதனையாகப் பதிவு செய்துள்ளது.

⊙ இவர் பெயர் அலிமுகமது உசைன் லெபனான் நாட்டிலுள்ள 'க்விளை' என்ற கிராமத்தில் வசிக்கிறார். அடுப்புக்கரி உற்பத்திச் செய்பவர்.

லெபனான் அரசின் அலுவலகச் சான்றிதழ்படி 1862 ஆம் ஆண்டுப் பிறந்தவர். இதற்கானச் சான்றிதழை ஆதாரமாகக் கொண்டு கின்னஸ் புத்தமும் இவர் பெயரைப் பதிவு செய்ய முன் வந்திருக்கிறது.

135 வயதுடைய இவர் வாக்கிங் ஸ்டிக் உதவியுடன் நடக்கிறார்.

⊙ 65 வயது 'பாட்டி' ஒருவர் தாயாகி உலகில் சாதனை படைத்திருக்கிறார். இவர் பெயர் அரகிலி என்பது. அமெரிக்கா கலிஃபோர்னியா இவர் பிறப்பிடம்.

இவர் தன் கணவரை மருத்துவரிடம் அழைத்துச் சென்று, 'செயற்கை முறையில் கருத்தரிப்புக்கு வழி உண்டா என்று கேட்டிருக்கிறார். அதற்கு, மருத்துவர் உங்கள் வயதிற்கும், உடல் நிலைக்கும் ஒத்துவராது என மறுத்துக்கூற, 'பாட்டி' வயதைக் குறைத்துக் கூறி

மருத்துவரை நம்ப வைத்து தன் எண்ணத்தை நிறைவேற்றி இன்று உலக அளவில புகழ் பெற்று விட்டார்.

⊙ பன்றி இறைச்சியின் 125 பகுதிகளை இணைத்து சமையல்காரர்கள் ஒரு கேக்கினை உருவாக்கி இருக்கிறார்கள். அதற்கு 'க்யூச்சி லோரைன்' என்று பெயரும் சூட்டியுளனளர்.

பாரிஸ் நகரில் தயாரிக்கப்பட்ட அந்நாட்டு பிரெஞ்சு உணவு இது.

என்னென்ன பொருள்களைச் சேர்த்து இந்த கேக்கினை தயாரித்து இருக்கிறார்கள்- இதோ பட்டியல்.

முட்டைகள் 1928, பன்றி இறைச்சி 71 கிலோ, பால் 119 லிட்டர், வெண்ணெய் 61 கிலோ.

இத்துடன் மற்ற சாமான்களும் சலந்துள்ளன. 16 அடி அகலம் கொண்ட இந்தக் கேக்கை முப்பது சமையல்காரர்கள் 16 மணிநேர உழைப்பிற்குப் பிறகு உருவாக்கி இருக்கிறார்கள்.

கின்னஸ் புத்தகத்திற்கு இக்கேக் தன் பெயரைச் சொல்லியிருக்கிறது.

⊙ நம் நாட்டு வீடுகளின் முன்னே மங்கல கரமாக கோலம் போடுவதைக் கடமையாகக் கொண்டவர்கள் நாம்.

இந்தக் கோலம் போடும் கலையையும் ஒருவர் சாதனையாக ஆக்கியிருக்கிறார்.

கோலாலம்பூரில் உள்ள ஷாப்பிங் மால் ஒன்றில் போட்டார்கள். 1500 கிலோ எடை கொண்ட பலவிதமான வண்ண வண்ண அரிசி மணிகளைக் கொண்டு 442 சதுரமீட்டர் அளவில் இந்தக் கோலம் போடப்பட்டுள்ளது.

⊙ பேரறிஞர் அண்ணாவின் இறுதி ஊர்வலத்தில் அதிகம் பேர் கலந்து கொண்டதால் அந்நிகழ்ச்சி கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்து இருக்கிறது.

⊙ 20 அடி உயரமும் 14 அடி சுற்றளவும் கொண்ட ஒரு காபி கோப்பையை, இந்திய சுதந்திரப்

பொன்விழா ஆண்டின் நிறைவை ஒட்டி டாடா காபி நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனுடைய மொத்த எடை மூன்று டன். இதை 24 பேர் சேர்ந்து 60 நாட்களில் செய்திருக்கிறார்கள்.

இந்தக் கோப்பை கின்னஸ் உலக சாதனை பட்டியலில் இடம் பெறுவதற்காகத் தயாரிக்கப்படுவதை அறிந்த 'கின்னஸ் புக் ஆஃப் வேர்ல்ட் ரிக்கார்ட்ஸ் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்கூட்டியே வாழ்த்துக்களை அனுப்பியதோடு, முறைப்படி இதனைப் பதிவு செய்ய ஒப்புதலும் அளித்துள்ளனர்.

பெங்களூர் அரண்மனை மைதானத்தில் முதலில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, பின் இந்தியா முழுவதும் முக்கிய நகரங்களுக்கு இந்த சாதனை கோப்பை உலா வரப்போகிறது.

⊙ அந்த மாணவனின் பெயர் 11. இச்சிறுவனின் சாதனை பலரை வியப்பில் ஆழ்த்துகிறது.

1994 ஆண்டு ஜூலை 24 ஆம் தேதி நாக்பூரில் உள்ள ஈஸ்டரன் ஸ்போர்ட்ஸ் கிளப் நீச்சல் குளத்தில் 12 மணி 44 நிமிடங்கள் வரை நீந்தினான். இதில் என்ன சாதனை இருக்கிறது. இதைப் போல் பலர் நீந்தி இருக்கிறார்களே என்பீர்கள். இதில் சாதனை ஒன்று இருக்கிறது, அது இதுதான்.

இரண்டு கைகளையும், கால்களையும் நான்கு கயிற்றால் கட்டிக் கொண்டு நீந்தியதுதான்.

இவன் சாதனையை விட உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த அனுராதா என்ற ஒன்பது வயது சிறுமியின் சாதனை நம்மை திணற அடிக்கிறது.

அனுப்சாகர் என்ற இடத்தில் இதே போலக் கைகளையும், கால்களையும் கட்டிக் கொண்டு 14 அடி ஆழமுள்ள குளத்தில் 12 மணி நேரம் நீந்திக் காட்டிச் சாதனை புரிந்திருக்கிறாள்.

⊙ இதற்கு முன்பே உலக சாதனை புரிந்துள்ள மலேசியாவின் பாம்பு மன்னன் அலிகான்.

இவர் தற்போது செய்துள்ள உலக சாதனை- 3X3 சதுர மீட்டர் பரப்பளவுள்ள கண்ணாடிப் பெட்டிக்குள் 5,000 விசமுள்ள தேள்களுடன் 20 நாட்கள் தங்கி வாழ்ந்து உலக சாதனை படைத்துள்ளார்.

⊙ பொருளாதார நிலையில் எவ்வளவுதான் பின்னடைந்து இருந்தாலும், மக்களைப் பொறுத்தவரை மேல் நாட்டு நாகரீகத்தைப் பெருமளவில் கடைபிடிக்கத் தொடங்கி விட்டார்கள் என்றே எண்ணத்தோன்றுகிறது.

அழகுப் போட்டிகளிலும் ஆடை போட்டிகளிலும் ஆண்களும், பெண்களும் ஆடப்படுவதைப்போல் 1998 ஆம் ஆண்டு கூட்டு முத்தமிடும் போட்டி ஒன்றில் 482 ஜோடிகள் ஒன்று கூடி கட்டியணைத்து முத்தமிட்டு தங்கள் 'திறமை'யைக் காட்டி இருக்கிறார்கள்.

மாஸ்கோ பூங்காவொன்றில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றதைப்போலவே 'ரஷ்யா நேஷனல் ரிகார்ட்ஸ்ஸிலும் இந்த 'முத்தமழை' இடம் பதிவாகி இருக்கிறது.

⊙ கடலூரைச் சேர்ந்த எஸ்.இ. ஜெயராமன் ஏழை தொழிலாளி. எளிமையானவர், அதிகம் படிப்பறிவு இல்லாதவர். இருந்தாலும் அதிகம் தன்னம்ப்பிக்கை கொண்டவர்.

இந்த உலகில் நம் பெயரை ஒவ்வொருவர் உதடுகளும் உச்சரிக்க வேண்டும் என்பதில் சிறு வயது முதற்கொண்டே இதயத்தில் எண்ணம் கொண்டவர்.

வானொலி, தொலைக்காட்சி, தெரு நாடகங்களில் நடித்தவர். எப்போதும் அதிகமாக பிறரிடம் பேசுபவர். அப்படி பேசும்போது நண்பர்கள் உன் வெட்டிப் பேச்சு எங்களுக்குத் தேவை இல்லை- என்று ஏளனம் பேசியவர்கள் அதிகம்.

அதனால் இவர் கோபம் கொண்டது இல்லை. மாறாக, என் பேச்சை உலகமே ஒரு நாள் கண்டு- கேட்டு வியக்கும்படி செய்து காட்டுவேன் என்று சபதம் ஏற்றார்.

அதன்படி தன் பேச்சுக்கலையை வளர்த்துக் கொள்ள, தனிமையிலும், நண்பர்களிடமும் நீண்ட நேரம் பேசத் தொடங்கி பயிற்சியினைத் தொடர்ந்தார்.

பள்ளிக் கல்வி அதிகம் இல்லை என்றாலும் நமது புராணங்கள், பழங்கதைகளை அதிகம் தெரிந்து கொண்டவர். அதில் தன்னை முழுமையாக வளர்த்துக் கொண்டவர்.

இந்த அளவில் தன்னை ஓரளவிற்கு வளர்த்துக் கொண்ட பின்- 1990இல் 360 மணிநேரம் தொடர்ந்து பேசினார். சாதனையும் ஏற்படுத்தினார். கின்னஸிலும் இடம பெற்றார்.

இந்த நிலையில் தனது முந்தைய சாதனையை முறியடிக்க வேண்டு என்று விரும்பினார்.

இந்த எண்ணம் அவருள் எழுந்தபோது இதை யார் முன் நின்று நடத்துவார்கள் என்ற கேள்விக் குறியும் அவருள் எழுந்தது.

அந்த நேரத்தில் 'தாய்' வார பத்திரிக்கையில் துணையாசிரியராகப் பணியாற்றிய பாபநாசம் குறள் பித்தனை அவர் ஊர்க்காரரான நாடக நடிகர் மாங்காய் சீனிவாசனோடு வந்து ஜெயராமன் சந்தித்தார். தன் 'சாதனை' எண்ணத்தையும் சொன்னார்.

அதற்கு அவர் 'தங்களது எண்ணத்தை நிறைவேற்றுகின்ற தகுதி படைத்தவர் தொழிலதிபர் டாக்டர் வி.ஜி, சந்தோசம்தான்' என்று கூறி அவரிடம் ஜெயராமனை அழைத்துச் சென்றார்.

அவரும் இவரின் தகுதியை உணர்ந்து தமது வி.ஜி.பி. தங்கக்கடற்கரையில் சாதனைக்கு வழிவகுத்தார்.

அதன்படியே 58 வயதில் கடலூர் ஜெயராமன் தங்கக்கடற்கரையில் தொடர்ந்து பேசி தன் முந்தைய சாதனையை முறியடித்தார். இந்த சாதனை இன்று வரை யாராலும் முறியடிக்கப்படவில்லை.

⊙ உலக அளவில் நிகழ்த்தப்படும் சாதனைகளை விளக்கும் கின்னஸ் புத்தகத்தின் 45-வது பதிப்பு சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் இப்போது அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டனும் இடம்பெற்று இருக்கிறார்.

இண்டர்நெட மூலம் பரபரப்பாக பொதுமக்களிடம் பிரபலமானவர் கிளிண்டன்தானாம்.

எல்லாம் அவரது 'செக்ஸ்' லீலையின் அருள்தான்.

❖❖❖

நீங்கள் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற வேண்டுமா?

கின்னஸ் என்ற உலக புகழ் மிக்க வர்த்தக நிறுவனத்திலிருந்து இந்த நூல் வெளியிடப்படுவதால் இது 'கின்னஸ் உலக சாதனைப் புத்தகம் என்ற பெயர் பெற்றுள்ளது.

இது முதன் முதலில் 1955 ஆம் ஆண்டில் 'சர் உறியூபீவர்' என்பவரால் வெளியிடப்பட்டது.

அன்று முதல் இன்று வரை இது தொடர்ந்து வெளிவருவதோடு, விற்பனையிலும் உலக சாதனைப் படைத்து வருகிறது.

இது வரை எட்டு கோடி பிரதிகளுக்கு மேல் சூடாகவும், சுவையாகவும் விற்பனையாகி இருக்கும் இந்தப் புத்தகம், உலகில் அரைநூறு மொழிகளில், லண்டனில் இருந்து வெளிவருகிறது.

இப்படி உலகப் புகழ்பெற்ற புத்தகத்தில் உங்கள் பெயர் இடம் பெற வேண்டும் என்றால் நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் இதுதான்.

நீங்கள் யாரும் செய்யாத ஒரு செயலை செய்ய வேண்டும்.

வேறு ஒருவர் செய்த சாதனையை நீங்கள் மிஞ்சும் வகையில் முறியடிக்க வேண்டும்.

இச் சாதனைக்கு வயது முக்கியமல்ல. செய்யும் சாதனையே முக்கியம்.

நீங்கள் உங்கள் சாதனைகளை தக்க சான்று களுடன் நிரூபிக்க வேண்டும்.

கின்னஸ் புத்தகத்தின் நிறுவனத்தின் அனுமதி பெற்ற பிறகே நீங்கள் உங்கள் சாதனையைத் தொடங்க வேண்டும்.

நீங்கள் செய்யும் சாதனை வெளிவந்த பத்திரிக்கை செய்திகள், நிழற்படங்கள், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முக்கியமான நபர்களின் கையொப்பத் தோடு கூடிய சான்றிதழ் போன்றவைகளை எல்லாம் லண்டன் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

நீங்கள் சாதனை செய்கின்றபோது ஏற்படுகின்ற லாப நஷ்டங்களுக்கோ, கஷ்டங்களுக்கோ, பொருள் இழப்பிற்கோ, உயிர் காப்பிற்கோ, விபத்திற்கோ நிறுவனம் பொறுப்பேற்காது.

எல்லாவற்றிற்கும் நீங்களே பொறுப்பேற்க வேண்டும்.

நீங்கள் சாதனை புரிய எண்ணம் கொண்டு விட்டீர்களா?

அப்படி என்றால் இதோ முகவரி

எடிட்டோரியல் அலுவலகம்

கின்னஸ் சூப்பர் லேடிவ்ஸ் லிமிடெட்

33, லண்டன் ரோடு,
என்பீல்டு
மிடில் செக்ஸ், இ.எண். 26
டி.ஜே. லண்டன்.யு.கே.

பதிப்புரை

உங்கள் மனத்தில் நம்பிக்கை வளர்க்கவேண்டும். நீங்களும் ஒரு சாதனை படைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் திரு பாபநாசம் குறள்பித்தன் அவர்களிடம் உலகை வியக்க வைக்கும் கின்னஸ் சாதனைகள் என்ற நூலை எழுதித்தருமாறு கேட்டுக் கொண்டோம். அவரும் பல ஆண்டுகளாகத் தேடி சேகரித்த செய்திகளையும் பற்பல சாதனைகளையும் தொகுத்து வழங்கினார்கள். அவருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந் நூலைப் படித்து, ஏற்றமிகு அணிந்துரை வழங்கிய திரு நல்லாமூர் கோ. பெரியண்ணன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூல் வெளிவர எங்களுக்கு உறுதுணையாக இருந்த திரு ஆறு. அண்ணல் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவண்
அம்சா பதிப்பகத்தார்

குறிப்புக்காக

எங்களின்

சிறந்த வெளியீடுகளை

வாங்கி பயனடையுங்கள்